
Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 336 | செவ்வாய்க்கிழமை | ஐப்பசி 16 ஆம் நாள் 02 நவம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

# இயற்கைப் பசளைத் திட்டத்தால் நாட்டில் அரசுக்கு கடும் எதிர்ப்பு!

## கிளாஸ்கோ விசேட கருத்தரங்கில் ஒத்துக்கொண்டார் கோத்தாபய



கிளாஸ்கோ, நவம்பர் 2

இரசாயனப் பசளை இறக்குமதியைக் குறைப்பதற்கும் சேதன விவசாயத்தை அதிகளவில் ஊக்குவிப்பதற்கும் எமது அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு பாராட்டுக் கிடைத்தாலும், ஒருசில விமர்சனங்களுக்கும் விவசாயிகளின் எதிர்ப்புகளுக்கும் முகங்கொடுத்து வருகின்றோம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

15



## விவசாயி சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, நவ. 2

விவசாய நடவடிக்கைக்கு சென்ற குடும்பத்தலைவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம், முல்லைத்தீவு குமுழமுனை பிரதேசத்துக்கு உட்

15

### முச்சந்தி முரளி

“இஞ்ச அவமானப் படுறதை உலகத்துக்கு முன்னால நிண்டு வெக்கமில்லாமல் சொல்லவும் ஒரு திறமை வேணும் பாருங்கோ...”



## கோத்தாபயவுக்கு எதிராக தமிழர்கள் ஆர்ப்பாட்டம்



கிளாஸ்கோ, நவ. 2

ஸ்கொட்லாந்தில், இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தங்கியுள்ள ஹொட்டலுக்கு வெளியே ஏராளமான தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பருவநிலை மாறுதல் தொடர்பான சர்வதேச

15

## ஆரம்பப்பிரிவு ஆசிரியருக்கு வவுனியாவில் கொரோனா!

வவுனியா, நவ. 2

வவுனியா, தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பப் பிரிவுக்கு கற்பிக்கும் ஆசிரியர் ஒருவருக்கு கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப்

15

## கடற்படைக்காக காணி அளவீடு கீரிமலையில் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், நவ. 2

கீரிமலை நகுலேஸ்வரம் பகுதியில் இன்று காணி அளவீடு நடைபெற

15

## 48 மணித்தியாலங்களுக்கு நாட்டில் நாளை மின் தடை?

*மின்சார சபை ஊழியர் சங்கம் விளக்கம்!*

கொழும்பு, நவ. 2

நாடு முழுவதும் உள்ள மின்சார சபை ஊழியர்கள் கொழும்பில் நாளை புதன்கிழமை ஒன்றுகூடி பெரும் போராட்டத்தை நடத்தவுள்ளனர். அதனால் நாட்டில் நாளை 48 மணித்தியாலங்களுக்கு மின் விநியோகத்தில் இடையூறுகள் ஏற்படலாம் என அச்சம் வெளியிடப்பட்

15

## 2 1/2 மாதங்களின் பின்னர் கைதானார் கொலையாளி?

கிளிநொச்சி, நவ. 2

கிளிநொச்சி, இரத்தினபுரம் பகுதியில் பாழடைந்த கிணற்றிலிருந்து பாயில் சுற்றப்பட்டநிலையில் சடலம் மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்பு

15



## நரேந்திர மோடியை சந்தித்தார் கோத்தா

கிளாஸ்கோ, நவ. 2

ஸ்கொட்லாந்தின் - கிளாஸ்கோ நகரில் நடைபெற்றுவரும் காலநிலை மாற்றம் தொடர்பான கருத்தமர்வில் கலந்துகொள்வதற்காகச் சென்றுள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி

15

### ஐ.எஸ். உறுப்பினருடன் தொடர்பு?

## 702 இலங்கையர் பற்றி விசாரணை ஆரம்பம்

கொழும்பு, நவ. 2

ஐ.எஸ். உறுப்பினர் ஒருவருடன் தொடர்பு வைத்திருந்தனர் என்று கூறப்படும் 702 இலங்கையர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்

15

## புதிய திரிபான ‘ஏ.30’ நாட்டுக்குள் வரலாம்!

*சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை*

கொழும்பு, நவ. 2

கொரோனாத் தடுப்பூசிகளைத் தகர்த்தெறியக்கூடிய, கொரோனா வைரஸின் புதிய திரிபான ‘A.30’ என்ற புதிய வைரஸ் திரிபு இலங்கைக்

15

## நொச்சிக்குளம் உடைப்பெடுக்கும் அபாயம்!

வவுனியா, நவ. 2

வவுனியாவில் கடும் மழை பெய்துவரும் நிலையில் நொச்சிக்குளம் உடைப்பெடுக்கும்நிலையில்உள்ளது. இதனையடுத்து உடைப்பை தடுக்கும் நடவடிக்கை இரவிரவாக மாவட்ட

12



# ஒரு கொடியின்கீழ் பொருந்துகின்ற தேசத்தை உருவாக்குவதே பொறுப்பு!

*ஜனாதிபதி செயலணியின் தலைவர் ஞானசார தேரர் தெரிவிப்பு*

**கொழும்பு, நவ.2**

**நாட்டில் சிறுபான்மையினர் என ஓர் இனம் இல்லை. ஒரு கொடியின் கீழ் பொருந்தக்கூடிய ஒரு தேசத்தை உருவாக்குவதே எமது பொறுப்பாகவுள்ளது. இவ்வாறு ‘ஒரே நாடு, ஒரே சட்டம்’ ஜனாதிபதி செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.**



நிகழ்நிலையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்த் தேசிய அரசியல் தரப்பினர் தங்களுக்கான வாக்குகள் குறித்தே கவனம் செலுத்துகின்றனர். வடக்கு, கிழக்கில் மத ரீதியான பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. எனினும், தெற்குடனான மதப் பிரச்சினை குறித்து கருத்துரைக்கின்றனர். தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை நாம் நன்கு அறிந்துள்ளோம். தற்போது வாய்ப்புக் கிடைத்துள்ளது. இதன் ஆரம்பத்திலேயே அதில் உள்ள குறைபாடுகளைக் கூறி பிரச்சினைகளை ஏற்படுத்தாமல் முதலில் அதன் திட்டங்களை வகுப்பது முக்கியமானதாகும். நாட்டில் சிறுபான்மை என்று ஒரு இனம் இல்லை. நாட்டில் இலங்கையர்கள் என்ற இனம் மாத்திரமே உள்ளது. இன ரீதியாக யாரையும் பிரித்துப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. பிரிந்து செல்வதன் ஊடாக நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது.

நாட்டுக்கு ஏற்ற ஒரு சட்டத்தையும், நாட்டின் எதிர்காலச் சந்ததியை அடுத்த நூற்றாண்டிலும் அதற்கு அப்பாலும் ஒரு கொடியின் கீழ் பொருந்தக்கூடிய ஒரு தேசத்தை உருவாக்குவதே எமது பொறுப்பாகவுள்ளது. “குறுகிய பிளவுகள் இல்லாத ஒன்றுபட்ட தேசமாக, பரஸ்பரம் கலாசாரம், சமய மரபுகளை மதித்து இணக்கமாக வாழும் தேசமே எமக்குத் தேவையாகவுள்ளது. சிங்களம், தமிழ், முஸ்லிம் என்றோ அல்லது பௌத்தம், இந்து, கத்தோலிக்கம், இஸ்லாம் என்ற அடிப்படையிலோ பிளவுபடாது, அனைத்து இனத்தவர்களையும் ஒன்றிணைக்கக் கூடிய ஒரு சட்டத்தை இந்த நாட்டுக்குள் கட்டியெழுப்புவதற்கான சூழலை உருவாக்குவதே எமது பொறுப்பாகவுள்ளது. நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகள், மத மற்றும் சிவில் அமைப்புகள் மற்றும் குழுக்கள் தங்களுடைய கருத்துகளைப் பரிமாற்றிக்கொள்ள எதிர்பார்க்கின்றோம். மறைமுக நிகழ்ச்சிநிரல் இல்லாமல் வரும் அனைவருக்கும் கலந்துரையாடலுக்கான கதவுகள் திறந்திருக்கும்- என்றார். (எ-இ)



# இலங்கைக்கு எதிராக வணிகத் தாக்குதல்

*எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சீற்றம்*

கொழும்பு, நவ. 2

‘மக்கள் வங்கியைக் கறுப்புப் பட்டியலில் இணைத்து இலங்கை மீது வணிகத் தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அடிக்கடி தேசப்பற்றுக் குறித்து கதைக்கும் ஆட்சியாளர்கள் மௌனம் காக்கின்றனர். சீனத் தூதுவரை அழைத்து இது தொடர்பில் விளக்கம் கோருவதற்கு ஆட்சியாளர்களுக்கு முதுகெலும்பில்லையா’ என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

‘சீனாவில் இருந்து தருவிக்கப்பட்ட உரம் தரக்குறைவு என்பதால் கப்பலை திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்ட கப்பலை அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்கள் மீள அனுப்பியுள்ளனர். அந்தக் கப்பல் தற்போது எமது கடல் எல்லைக்குள் இருப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தற்போது தேசப்பற்றாளர்கள் எனக் கூறிக்கொள்ளும் இந்த ஆட்சியாளர்கள் என்ன செய்யப்போகின்றனர்? வணிகத்தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது. எமது நாட்டின் மக்கள் வங்கியைக் கறுப்புப் பட்டியலில் இணைத்துள்ளனர். இது தொடர்பில் தமக்குத் தெரியாது என நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

‘தரக்குறைவான உரத்துக்கு எம்மால் கொடுப்பனவு செலுத்த முடியாது. எமது நாட்டின் பொருளாதார அடையாளத்தை கறுப்புப் பட்டியலில் இணைக்கக்கூடாது. அது தவறான நடவடிக்கை.’ என சீனத்தூதுவரை அழைத்து, தெரிவிப்பதற்கு ஜனாதிபதி உள்ளிட்ட ஆட்சியாளர்களுக்கு முதுகெலும்பில்லையா? எங்கே உங்கள் (அரச தரப்பு) தேசப்பற்று?- என்றார். (ம-44)

# 36 பேருக்கு தொற்றுறுதி

வவுனியா, நவ. 2

வவுனியாவில் ஒரு வயதுக் குழந்தை உட்பட 36 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் ஆகியோருக்கு மேற்கொள்ளப்பட்ட கொரோனா சோதனையின் முடிவுகளும், எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் மற்றும் அன்டிஜென் பரிசோதனையின் முடிவுகளும் நேற்றுமுன்தினம் வெளியாகின.

இதிலேயே 36 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-110)

# குற்றப்பத்திரிகையைத் திரும்பப் பெற்றமைக்கு காரணம் என்ன?

**இரகசிய அறிக்கையை தாக்கல் செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு**

கொழும்பு, நவ. 2

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொடவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையை மீளப்பெறுவதற்கான காரணங்களை விளக்கி இரகசிய அறிக்கையை தாக்கல் செய்ய மேன்முறையீட்டு நீதிமன் றம் சட்டமா அதிபருக்கு அனுமதி வழங்கியுள் ளது.

சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே, கரன்னகொடவுக்கு எதிரான குற்றப்பத்திரிகை களை மீளப்பெற்றமை தொடர்பில் தொகுக்கப்பட்ட இரகசிய அறிக்கையை தமது திணைக்களம் வைத்துள்ளதாக தெரிவித்ததோடு, அதனை இரகசிய அறிக்கையாக தாக்கல் செய்வதற்கு நீதிமன் றத்தின் அனுமதியையும் கோரினார்.

இதன்படி, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சோபித ராஜகருணா மற்றும் நீதியரசர் தம்மிக்க கணேபொல ஆகிய இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு, இந்த அறிக்கையை எதிர்வரும் நவம்பர் மாதம் 2ஆம் திகதி (இன்று) நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட மீது குற்றச்சாட்டுகளை தொடர முடியாது என சட்டமா அதிபர் திணைக்களம் அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

இடமாற்றல் விவகாரம்

# ஆசிரியர்களை அழைப்பதை தவிர்ப்பதற்கு முடிவு

கொழும்பு, நவ. 2

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கல்வி அமைச்சின் இடமாற்றப் பிரிவுக்கு ஆசிரியர்களை அழைக்கும் செயற்பாட்டை இடைநிறுத்த தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. தேசிய பாடசாலைகளின் ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் காணப்படும் பிரிச்சினைகள் குறித்து அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கமைய, 0112 784 434, 0112 785 141 அல்லது 0112 785 150 என்ற இலக்கங்களுக்கு தொடர்பை ஏற்படுத்தி தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# இந்தியத் தூதுவருடன் சபாநாயகர் சந்திப்பு

கொழும்பு,நவ.2

இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நாடாளுமன்றில் நேற்றுச் சந்தித்தார்.

சந்திப்பில் கொரோனா நிலைமையை வெற்றிகரமாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்தமை தொடர்பில் இந்தியத் தூதுவர், இலங்கை அரசுக்கு தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார். இந்திய அரசு தொடர்ந்தும் இலங்கைக்கு வழங்கி வரும் ஒத்துழைப்புக்களுக்கு, சபா நாயகர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இருதரப்பு உறவுகளை பல்வேறு துறைகளிலும் மேலும் விருத்தி செய்வது தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

சந்திப்பில் நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவும் கலந்துகொண்டார். (ஒ-4)



# 2 நாள்களில் 12பேர் விபத்துக்களால் சாவு




**கொழும்பு, நவ. 2**
**நாட்டில் கடந்த இரு நாள்களில் (சனி, ஞாயிறு) இடம்பெற்ற வீதிவிபத்துக்களில் 12 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ ஊடகங்களிடம் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'விபத்துக்களால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்டு, வீதிகளில் பயணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் வீதிகளில் பயணிக்கும் வாகனங்களில் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அதேபோன்று பாதுகாப்பின்றி, கவனயீனத்துடன் சாரதிகள் பயணிப்பதும் அதிகரித்துள்ளது. விசேடமாக ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்துக்களில் பாதசாரிகள் மூவர் உயிரிழந்துள்ளனர்.

வீதிகளில் பயணிக்கும் பாதசாரிகளையும் வாகனங்களையும் கருத்தில்கொண்டு மிக அவதானத்துடன் பயணிக்குமாறு சகல வாகனச் சாரதிகளிடமும் நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

மோட்டார் சைக்கிள் செலுத்துநர்களே அதிகளவில் விபத்துக்குள்ளாகின்றனர்.

மோட்டார் சைக்கிள் செலுத்துநர்களால் வீதிகளில் பயணிக்கும் பாதசாரிகளும் உயிரிழக்கின்றனர். அதேபோன்று விபத்துக்களை எதிர்கொள்வதால் மோட்டார் சைக்கிள் செலுத்துநர்களும் உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

எனவே, வீதியில் பயணிக்கும்போது போக்குவரத்து விதிமுறைகளை மதித்து மிகவும் நிதானத்துடன் பயணிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விபத்துக்கள் தொடர்பான வருடாந்த புள்ளிவிவரத் தகவலைப் பார்க்கும்போது மோட்டார் சைக்கிள் விபத்துக்களே அதிகளவு பதிவாகியுள்ளன'- என்றார். (ம-22)



## தண்ணீரில் மூழ்கி மூன்று பேர் சாவு

கொழும்பு, நவ. 2
ஐந்து வயதுச் சிறுமி உட்பட மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மொனராகல, தம்பகல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீகஹப்பிட்டிய வாவியில் மீன்பிடிக்கச் சென்ற நபர் ஒருவர் நீரில் மூழ்கியுள்ளார். களுத்துறை இங்கிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பான ஆற்றில் குளிப்பதற்காகச் சென்ற 68 வயது நபரும், 5 வயதுச் சிறுமியும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். (ம-22)

## கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டாலும் தொற்று அபாயம் நீங்கவில்லை!

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, நவ.2
நாட்டில் சில கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளபோதும், கொரோனாத் தொற்று இன்னும் அதிகமாகப் பரவிக் கொண்டிருப்பதால் மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டி இராணுவ வைத்தியசாலையில் நேற்று முன்னணி இராணுவத்தினருக்கு பூஸ்டர் தடுப்பூசியை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அன்றாடம் 500 முதல் 600 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் நிலையில், பொதுமக்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். இல்லையெனில் எதிர்காலத்தில் கொரோனாத் தொற்றாளர்களது எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்.

மக்களின் வாழ்க்கையைக் கருத்திற்கொண்டு மாகாணங்களுக்கு இடையேயான கட்டுப்பாடுகள் உட்பட பல்வேறு கட்டுப்பாடுகளை நீக்குவதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

மக்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி பெறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் - என்றார். (எ-22)

## வடக்கு ஆளுநர் அலுவலகம் முன்பாக இன்று கண்டனப் போராட்டம்!

யாழ்ப்பாணம், நவ. 2
வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக இன்று கண்டனப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட இணைப்பாளர் எஸ்.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசினால் உர இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளதோடு கால்நடைகளுக்கான தீவனம் பெறுவதில் இடர்பாடு காணப்படுவதால் விவசாயிகள் கால்நடை வளர்ப்போர், பண்ணையாளர்கள் பெரும் இடர்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். அதேவேளை வலி. வடக்குப் பகுதியில் நல்லாட்சி அரசாங்கத்தின்போது தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில் முதல்கட்ட நிதி மட்டுமே பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலதிகமான நிதி வசதிகள் இன்றுவரை மக்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே பாதிக்கப்பட்ட மக்களை ஒன்றிணைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும்- என்றார். (ம-20)




**இண்டைக்குச் சொல்லப்போற விசயம் சத்தியமா ஒரு மதத்துக்கு எதிரானது இல்லை, தனிநபர் ஒராள் பற்றினதுதான். ஊருக்கு நல்லது சொல்லப்போக, பிறகு தேவையில்லாம பட்சியை மதவாதி எண்டு சிலர் முத்திரை குத்திப்போடுவினம் எண்டுதான் இந்தத் தன்னிலை விளக்கம். இனி விசயத்துக்கு வருவம்.**

**அச்சுவேலி, இராசவீதியில முந்தி ஒரு நெசவு தறி ஆலை இருந்தது உங்களில கனபேருக்குத் தெரியும். அங்கத்தை இளம்பிள்ளையளுக்கு வேலைவாய்ப்பு குடுக்கிறதுக்காக அதைக் கட்டினவை. ஒரு முப்பது, முப்பத்தைஞ்சு பொம்பிளைப்பிள்ளையளுக்கு இந்த நெசவாலை வருமானம்தான் வாழ்க்கை குடுத்தது ஆனால் அதெல்லாம் உந்த யுத்தம் தொடங்கினதோட இல்லாமல் போட்டுது. ஒவ்வொருக்காவும் அதை ஆமி இடிச்சு, அழிச்சு நெசவுதறி ஆலை இயங்காமலே போட்டுது.**

**இப்பத்தை பிள்ளையளுக்கு அங்க நெசவுதறி ஆலை எண்டது இருந்தது எண்டு சொன்னாலே நம்பமாட்டினம். ஏனெண்டால் இப்ப அங்க ஒரு மதத்தின்ர சபை இயங்குது. சபை எண்டு சொல்லுறதை விட ஒரு போதகர் மட்டும் அதை இயக்குறார். ஆளுக்கு எல்லா மட்டத்திலும் நல்ல செல்வாக்கு. முந்தி அச்சுவேலியில நாட்டாமை காட்டின வீணைக்கட்சி ஆளின்ர அணைவில, நெசவு ஆலையை தன்ர சபையை அங்க இயக்கினார் அந்தப் போதகர். சும்மா இருக்கிற கட்டடத்தை அவை பிடிச்சதை முதலில ஒருத்தரும் பெரிசா எடுக்கேலை. ஆனால் அக்கம் பக்கத்தில இருக்கிறவையின்ர காதை வெடிக்கப் பண்ணுற மாதிரி காட்டுக்கத்தல் கத்தினா சனங்களும் எவ்வளவுநாள்தான் பொறுக்க முடியும்? அதால போதகருக்கு எதிரா வழக்கு போட்டவை. அந்த வழக்கில 2 நிபந்தனையளை நிறைவேற்றினால்தான் அந்தப் போதகரும் அவரின்ர சபையும் அங்க இயங்க முடியும் எண்டு தீர்ப்பும் வந்திச்சு.**

**ஒண்டு, போதகரோ அவரைச் சார்ந்த சபை ஆக்களோ அக்கம் பக்கத்தைக் குழப்பிற மாதிரி, சூழலைக் கெடுக்கிற மாதிரி சத்தம் போடக்கூடாது. ரெண்டாவது, அந்த நெசவாலையில போதகரும் அவரின்ர சபையும் இயங்குறதுக்கு சட்டரீதியான அனுமதியும், ஆவணமும் இருக்கிறதை பிரதேச சபையும், பொலிஸும் உறுதி செய்யவேணும். இந்த ரெண்டும் தான் அந்தத் தீர்ப்பில சொன்ன நிபந்தனையள். 06.09.2016 இல இந்தத் தீர்ப்புக் குடுத்து இப்ப 5 வருசமாப் போட்டுது. ஆனால் நீதிமன்றத் தீர்ப்பை இன்னும் அங்க அமுல்படுத்தாமல், பழையபடி போதகர் தன்ர ஆட்டத்தை தொடர்ந்து செய்யிறாராம். முந்தின மாதிரி அக்கம் பக்கத்தை குழப்பிற மாதிரி சத்தம் போட்டு கத்துறதும், நெசவுதறி ஆலையில அடாத்தாப் புகுந்ததால, ஆவணத்தை காட்டி உறுதிப்படுத்தாமலே இயங்கிறதுமா அவர் தன்ர வேலையை வடிவாப் பார்த்துக்கொண்டிருக்கிறாராம். பொலிஸோ, பிரதேசசபையோ தங்களுக்கு நீதிமன்றம் குடுத்த பணியை இன்னும் செய்யாமல் இருக்கிறதுக்கும் என்ன காரணம் எண்டு விளங்கேலை. வீணைக்காரரும் என்ர பக்கம், கனவு பாழானவரும் என்ர பக்கம். அதால ஒருத்தரும் என்னை ஒண்டும் செய்ய ஏலாது எண்டு ஊர்ச்சனத்துக்கு போதகர் வீம்பும் கதைக்கிறார். ஒருவேளை அந்தத்துணிவிலதான் ஆள் இவ்வளவு உசாரா நடக்குதோ தெரியேலை.**

**ஒரு நீதிமன்றம் குடுத்த தீர்ப்பை மதிக்காம அதிகாரியளும், போதகரும் நடக்கிறது குற்றமில்லையா? ஆரும் நீதி தெரிஞ்சவை சொல்லுங்கோவன். குறிப்பா மக்களுக்காக நல்ல சேவை செய்யிற ஒரு பிரதேச சபையின்ர தவிசாளர் எண்டு பேரெடுத்த நிரோஷ் இந்தப் பிரச்சினையில தங்களுக்கு நீதி செய்வார் எண்டு சனங்கள் எதிர்பார்க்கினம்.**

**தன்ர அதிரடியை இதிலையும் அவர் காட்டி நீதிக்கு நிரோஷ் வலுச்சேர்க்க வேணும் எண்டு பட்சி எதிர்பாக் குது.செய்வாரா....?**

**- பட்சி**

# சீன இரசாயன உரக் கப்பல் எல்லைக்குள் இல்லையாம்!

**கொழும்பு, நவ.2**

**இலங்கைக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்ட சீனக் கப்பலான ஹிப்போ ஸ்பிரிட், இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைந்துள்ளதை கடல்சார் போக்குவரத்து இணையத்தளங்கள் உறுதிப்படுத்தியுள்ளன என்று வெளியான செய்தியை துறைமுக அதிகாரசபை மறுத்துள்ளது.**

சேதன உரத் தொகுதியை ஏற்றிய இந்தக் கப்பல் தற்போது ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை அண்மித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் கப்பல் தொடர்பில் தமக்கு எந்தவித தகவலும் கிடைக்கவில்லை என்று தெரிவித்த அதிகாரசபையின் அதிகாரி, கடல் மார்க்கமாகப் பயணிக்கும் போது இலங்கை எல்லைக்குள் நுழைவது சட்ட விரோதமாகாது என்றும் குறிப்பிட்டார்.

சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக மாத்திரமே இலங்கை கடற்படையினர் இலங்கை கடற்பரப்பை கண்காணிக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீன நிறுவனமான குவின்ங்டாவோ சீவின் பயோடெக் குரூப் கம்பனியின் சேதன உரத் தொகுதியை ஹிப்போ ஸ்பிரிட் கப்பல் இலங்கைக்கு கொண்டுவந்தது. முதல் மாதிரிகள் இலங்கையால் நிராகரிக்கப்பட்டபோதும் அந்தக் கப்பல், சீனாவுக்குத் திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

சிங்கப்பூருக்குப் பயணம் செய்த ஹிப்போ ஸ்பிரிட், சீனாவுக்குத் திரும்பாமல் இலங்கைக்கு மீண்டும் திரும்பி வருகின்றது என்றும் கூறப்படுகின்றது.

தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவை மூலம் உர மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டுள்ளது டன், பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய ஒருசில பக்ரீரியா உள்ளிட்ட நுண்ணுயிர்கள் அந்த உரத்தில் உள்ளமை உறுதி செய்யப்பட்டது. அதையடுத்து அந்த உரங்களை இறக்குமதி செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## உரத்தட்டுப்பாட்டின் எதிரொலி மரக்கறிகளின் விலை உச்சம்

கொழும்பு,நவ.2

உரத் தட்டுப்பாடு காரணமாக, மரக்கறிகளின் விலை 100 வீதம் உயர்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவிக்கையில்;

பொருளாதார மையங்களுக்கு மரக்கறி வரத்து குறைந்துள்ளது.

முன்னதாக, தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்கு 2.5 மில்லியன் கிலோகிராம் மரக்கறிகள் கிடைத்தன. தற்போது மரக்கறிகளின் இருப்பு 3 லட்சம் கிலோகிராமாகக் குறைந்துள்ளது.

அடுத்த இரண்டு மாதங்களில் மழை அதிகரிப்பால் மரக்கறிகளின் விலை மேலும் உயரும்.

மொத்த சந்தையில் 200 ரூபாவாக இருந்த ஒரு கிலோகிராம் பீன்ஸ் சில்லறைச் சந்தையில் 450 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் 280 ரூபாவாக இருந்த மிளகாய் 540 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது- என்றனர். (ஒ-4)

## வழங்கப்பட்ட சுதந்திரத்தை சரியாகப் பயன்படுத்துங்கள்!

### வலியுறுத்துகின்றனர் சுகாதாரப் பிரிவினர்

கொழும்பு, நவ.2

மாகாண எல்லைக் கட்டுப்பாடுகள் மற்றும் பிற கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் மக்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை மக்கள் தவறாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்வதற்கும், பொருளாதார விவகாரங்களை எளிதாகப் பராமரிப்பதற்குமே மாகாணங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன.

உல்லாசப் பயணம், யாத்திரைகள் சென்று மகிழ்வதற்கான நேரம் இதுவல்ல. மக்கள் முடிந்தவரை வீட்டுக்குள்ளேயே இருக்க பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.

பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்காவிட்டால் ஏற்படும் சேதம் மீளமுடியாததாக இருக்கலாம்- என்றார். (எ-இ)

## வவுனியா பிரதேச சபைக்கு புதிய செயலாளர் நியமனம்



வவுனியா,நவ.2

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு புதிய செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் செயலாளராகக் கடமையாற்றிய திருமதி சுகந்தி கிசோர் அண்மையில் ஓய்வு பெற்றார். இதனையடுத்து புதிய செயலாளராக முகாமைத்துவ உத்தியாகத்தர் சேவை அதிசிறப்புத் தரத்தைக்கொண்ட தெர்ஜனா சுகுமார் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நேற்று உத்தியோகபூர்வமாக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் வவுனியா நகரசபை மற்றும் துணுக்காய் கல்வி வலயத்தின் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-4-110)

## வாக்காளர் இடாப்பு பிரதிகள் இணையத்தில்

கொழும்பு,நவ.2

வாக்காளர் இடாப்புப் பிரதிகளை இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

WWW.SLELECTION.GOV.LK எனும் இணையத்தள முகவரிக்குள் பிரவேசித்து, வாக்காளர் இடாப்புப் பிரதியைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்தச் சேவை இலவசமாக வழங்கப்படுகின்றது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ஒ-4)

## வாகனங்களின் விலைகளில் சற்றுச் சரிவு!

கொழும்பு. நவ.2

நாட்டில் கடந்த சில மாதங்களாக வாகனங்களின் விலைகள் உச்சத்தைத் தொட்டிருந்த நிலையில், தற்போது அவற்றின் விலைகளில் சற்றுச் சரிவு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் மெரெஞ்ஜிகே இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தின் பின்னர் வாகனங்களின் விலைகளில் மாற்றம் ஏற்படலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வாகனங்களின் உதிரிப்பாகங்களின் விலைகள் பெருமளவில் அதிகரித்துள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-இ)

## இணைந்த வடக்கு - கிழக்குக்கு முதலமைச்சராவதற்குத் தயார்

### சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ.2

வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபையில் முதலமைச்சராக இருக்க விரும்புகின்றேன் என்று நான் கூறியிருந்தேன். அப்போது அதை நான் விளையாட்டாகவே கூறியிருந்தேன்.

ஆனால் இப்போது சிந்தித்துப் பார்த்தால் அது ஒரு நல்லதிட்டம். எனக்கு அப்படி ஒரு வாய்ப்பு வந்தால் நான் நிச்சயமாக அதனை விரும்புவேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

வானொலி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கும் - கிழக்கும் இணைந்த மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்கும் எனது விருப்பத்தை நீங்கள் பார்க்கலாம்.

நான் இப்படிக் கூறியவுடன், சாணக்கியன் எவ்வாறு இப்படிக் கூற முடியும் என்று என் மீது விமர்சனங்கள் முன்வைக்கப்படலாம்.

இது என்னுடைய விருப்பம், எனது தனிப்பட்ட ஆசை.

கிழக்கில் எனது செயற்பாடுகளை பொறுத்தவரையில், நான் ஒருபோதும் இஸ்லாமிய மக்களுக்கு எதிராகப் பேசி என்னுடைய அரசியலை நான் செய்யவில்லை.

2020 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சியை வெற்றி பெறச் செய்ய கிழக்கு மாகாண முஸ்லிம்கள் ஒருபோதும் விரும்பியதில்லை.

அதற்கு எதிராகத்தான் மயில், மரம், குதிரை போன்ற பலருக்கு வாக்களித்தனர். ஆனால், அவர்கள் மக்களின் வாக்குகளைப்பெற்று, வெற்றிப்பெற்றுவிட்டு பின்னர் மொட்டுடன் போய் இணைந்து கொள்வார்கள் என அந்த மக்கள் ஒருபோதும் எண்ணியிருக்கவில்லை.

தமிழ், முஸ்லிம் ஒற்றுமை இல்லை என்றால் கிழக்கு மாகாணத்திலே இன்னும் ஒரு பத்து வருடத்தின் பின்னர் தமிழ் மக்கள் பெரும்பான்மை சமூகமாக வாழமாட்டார்கள். இலங்கையிலே ஒன்பது மாகாணங்களிலே 7 மாகாணங்கள் பெரும்பான்மைச் சமூகம் கையிலே வைத்திருக்கும் மாகாணங்களில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழவில்லை என்றால் எட்டாவது மாகாணமாக கிழக்கு மாகாணம் பெரும்பான்மைச் சமூகத்தினரின் கைகளுக்கு சென்றுவிடும்- என்றார். (எ-இ)

# பெரமுன – பங்காளிகள் மோதல் வலுப்பெற்றது!

### இரு தரப்புகளும் சரமாரியாக சொற்கணை

கொழும்பு, நவ. 2


ஆளும் கூட்டணியின் தலைமைக்கட்சியான பொதுஜன பெரமுனவுக்கும், பங்காளிக் கட்சிகளுக்கும் இடையிலான உள்ளக மோதல் உக்கிரமடைந்துள்ளது.

இரு அணிகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் சரமாரியாக சொற்கணைகளைத் தொடுத்து வருவதால் தெற்கு அரசியலில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் 40 வீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் அரசின் முடிவுக்கு எதிராக பங்காளிக்கட்சிகள் போர்க்கொடி தூக்கின. இது தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் ஆகியோருடன் நடைபெற்ற சந்திப்புக்கள் தோல்வியில் முடிவடைந்தன.

இந்த நிலையில் இந்தத் திட்டத்தை தோற்கடிப்பதற்காக மக்களை அணிதிரட்டுவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக 'மக்கள் சபை' எனும் கூட்டத்தை பங்காளிக் கட்சிகள் நடத்தின.

சுதந்திரக்கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, தேசிய காங்கிரஸ், எமது மக்கள் சக்தி உட்பட 11 கட்சிகளின் பிரதிநிதிகளும், அரசுக்கு ஆதரவு வழங்கும் தேசிய வாத



அமைப்புக்களின் உறுப்பினர்களும் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது அரசின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்த பங்காளிகள், அமைச்சுப் பதவியை அல்ல 'யுகதனவி' திட்டத்தை தோற்கடிக்க எந்தவொரு தியாகத்தையும் செய்வதற்கு தயார் எனவும் அறிவித்தனர். பங்காளிகளின் இந்த நடவடிக்கையால் மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர்.

''உள்ளே இருந்து காலை வாருவதைவிட, வெளியே சென்று விமர்சிப்பது மேலானது. முடிந்தால் அமைச்சுப் பதவியை துறந்து வெளியேறுமாறு சவால் விடுக்கின்றோம். நாங்கள் தான் தலைமைக்கட்சி. பங்காளிகளின் ஆட்டத்துக்கு ஆடமுடியாது. அவர்கள் வெளியேறாவிட்டால், வெளியேற்ற வேண்டிய நிலைமை ஏற்படும்" - என்று பொதுஜன பெரமுனவின் எம்.பிக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இதற்கு பங்காளிக்கட்சிகளின் பிரதிநிதிகளும் பதிலடி கொடுத்துவருகின்றனர். இதனால் மோதல் தற்போது உக்கிரமடைந்துள்ளது.

# அரசிலுள்ள பங்காளிக் கட்சிகளை நீக்கும் உரிமை எவருக்குமில்லை

### அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



கொழும்பு, நவ. 2

**பொதுஜன பெரமுனவுக்கோ, அதில் இருக்கும் நபர்களுக்கோ, அணிக்கோ அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சிகளை நீக்கும் உரிமையில்லை என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

பொதுஜன பெரமுனவின் பிரதிநிதிகள், அரசில் அங்கம் வகிக்கும் சிறிய கட்சிகள் சம்பந்தமாக அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் சிங்கள வானொலி நிகழ்ச்சி ஒன்றில் பதிலளிக்கும்போதே வாசுதேவ நாணயக்கார இதனைக் கூறியுள்ளார்.

அரசாங்கம் என்பது என்ன என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அரசாங்கம் என்பது கூட்டணி அரசாங்கம். கூட்டணி அரசாங்கத்தில் கூட்டணிக் கட்சியினருக்கு இடையில் வெவ்வேறான நிலைப்பாடுகள் இருப்பது சாதாரணமானது.

தற்போதைய அரசாங்கம் நாங்கள் அனைவரும் இணைந்து உருவாக்கிய அரசாங்கம். அவ்வாறு உருவாக்கிய அரசாங்கத்தில் இருந்தவாறு எமது நிலைப்பாடுகளைக் கூற உரிமையில்லை என்று கூறுவார்களெனில், அதனைத் தீர்மானிப்பது நீதிமன்றத்தில் அல்ல, அரசியல் ரீதியாகவே தீர்மானிக்க வேண்டும்.

யார் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள்? இவர்களே எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக எமது கூட்டணிக் கட்சியின் தலைவர் ஒருவருக்கு எதிராக முதலில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தனர். ஒரே அரசாங்கத்துக்குள் இருந்து கொண்டு இதனை எப்படிச் செய்ய முடியும்?

தற்போது இந்தப் பிரச்சினையை பெரிதாக எடுத்துக்கொண்டுள்ளனர். இது அரசாங்கத்துக்குள் பேசித் தீர்த்துக்கொள்ள முடியாத பிரச்சினை என்று கூறுமளவுக்கு சிலர் மோசமானவர்களாக மாறியுள்ளனர். அப்படியானால், இவர்கள் யார் என்பதை நாட்டு மக்கள் அறிந்து கொள்ளவேண்டும். அவர்களால் தனித்து தீர்மானங்களை எடுக்க முடியாது. அனைவரும் இணைந்தே அரசாங்கத்தை உருவாக்கினோம். அப்படியானால், அனைவருக்கும் பொருந்தும் வகையில் ஒருவரால் எப்படி தீர்மானங்களை எடுக்க முடியும். தீர்மானங்களை எடுக்க வேண்டுமாயின் நாங்கள் அனைவரும் இணைந்து எடுக்க வேண்டும். அதனை விடுத்து, தனிக்கட்சியால் தீர்மானங்களை எடுக்க முடியாது - என்றார். (ம)

# எதைச் சொன்னாலும் கேட்பதில்லை அரசு

### சலித்துக் கொள்கிறார் மைத்திரி

எனது ஆட்சியில் விவசாயிகளுக்கு இத்தனை பிரச்சினைகள் வருவதற்கு இடம் கொடுக்கவில்லை. இந்த அரசிடம் விவசாயிகள் தொடர்பாக எத்தனை தடவை பேசினாலும் எனது பேச்சைக் கேட்பதில்லை என்று தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால.

விவசாயத்துக்கு தேவையான உரத்தை வழங்குமாறு வலியுறுத்தி, மொரகஹகந்த மற்றும் எலஹெர கமநல நிலையத்தின் 41 விவசாய அமைப்புக்கள் கடந்த 24 ஆம் திகதி முதல் பகமுன நகர மத்தியில் தொடர் உணவுத் தவிர்ப்புப் போராட்டதை ஆரம்பித்துள்ளனர். போராட்டத்தில் ஈடுபட்டு வரும் விவசாயிகளை நேரில் சென்று சந்தித்தபோதே மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ-இ)

# ராஜபக்சக்களை விரட்டியடிப்பதற்கான அரசியல் சமர் கம்பஹாவில் ஆரம்பம்

கொழும்பு, நவ. 2

"ராஜபக்சக்களை விரட்டியடித்து, சஜித்தை ஆட்சிக்கு கொண்டுவருவதற்கான அரசியல் சமருக்கு கம்பஹா மாவட்டத்தில் அடித்தளம் இடப்பட்டுள்ளது. எனவே, அடுத்த தேர்தலில் நிச்சயம் மாற்றம் வரும்" என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, பதுளை மாவட்டத்திலிருந்து, அரசியல் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு கம்பஹா மாவட்டத்துக்கு வந்துள்ளார். அவர் வத்தளைத் தொகுதி அமைப்பாளராக செயற்படுவார். இதற்கான நிகழ்வு வத்தளையில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

"நெருக்கடியான கட்டத்தில்தான் ஹரின் பெர்னாண்டோ பதுளைக்கு



சென்றார். 7 வருடங்களுக்குள் அங்கு கோலோச்சினார். 2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஊவா மாகாண சபைத் தேர்தலில் களமிறங்கி திருப்பு முனையை ஏற்படுத்தினார். ஆட்சி மாற்றத்துக்கு அடித்தளமிட்டார்.

தற்போது கம்பஹா மாவட்டத்துக்கு வந்துள்ளார். எனவே, ராஜபக்சக்களை விரட்டியடித்து, சஜித்தை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை இன்று முதல் இங்கு ஆரம்பமாகும். ஏனெனில் கம்பஹா மாவட்டம் எவர் கைக்கு செல்கின்றதோ அவர்கள்தான் ஆட்சியைப் பிடிப்பார்கள் என்ற ஐதீகம் இன்றளவிலும் உள்ளது. இந்த அரசை விரட்டியடிக்க 69 லட்சம் பேர் அல்ல ஒட்டுமொத்த மக்களும் தயாராகிவிட்டனர். அடுத்த தேர்தலில் இதனைப் பார்க்க முடியும்" - என்றார். (ம-44)

# 'எம்மை ஒழிக்க முற்பட்டால் உங்களுக்குத்தான் அழிவு'

### பெரமுனவுக்கு கம்யூனிஸ்ட் கட்சி எச்சரிக்கை

கொழும்பு, நவ. 2

"பங்காளிக்கட்சிகளை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமானால் அங்கு தான் அரசியல் அழிவும் ஆரம்பமாகும் என்பதை பொதுஜன பெரமுன புரிந்துகொள்ள வேண்டும்" இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி.

கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையத்துக்கு எதிராக போர்க்கொடி தூக்கி, மக்கள் கருத்தரங்குகளை நடத்திய பங்காளிக் கட்சிகள்மீது சொற்கணை தொடுத்துவரும் பெரமுன, அரசிலிருந்து வெளியேறுமாறும் அழுத்தம் கொடுத்துவருகின்றது.

இந்த நிலையிலேயே இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வீரசுமன வீரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அரசியல் இருப்பிடமின்றி தவித்த வேளையில், இன்று சிறுகட்சிகளென விளிக்கப்படும் நாம்தான் மாற்று அரசியலுக்கான மேடையை அமைத்துக்கொடுத்தோம். அதன் மூலம்தான் பொதுஜன பெரமுன தோற்றம் பெற்றது. எம்மை கறிவேப்பிலையாக பயன்படுத்த முற்படுபவர்கள் இதனை மறக்கக்கூடாது. சிறு கட்சிகளை கருத்தியல் ரீதியில் தோற்கடித்து, அவற்றை அழிக்க முற்பட்டால் அத்தகைய தரப்புக்கே அரசியல் ரீதியில் அழிவு ஏற்படும். அரசியல் வரலாற்றில் அப்படி பல சம்பவங்கள் நடந்தும் உள்ளன' - என்றார். (ம-44)

# மோடியை சந்தித்துப் பேச கூட்டமைப்பினர் விருப்பம்!

கொழும்பு, நவ. 2

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை விரைவில் சந்தித்துப்பேச ஏற்பாடுசெய்து தருமாறு, கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரிடம் தமிழத் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே இடையிலான சந்திப்பு கடந்த 29ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போதே பாக்லேயிடம் பிரதமர் நரேந்திரமோடியை சந்திப்பதற்கு சம்பந்தன் கேட்டுக்கொண்டார் என்று தெரியவருகின்றது. அண்மையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்தியாவுக்கு அழைத்து, இந்தியப் பிரதமருடன் சந்திப்பை நடத்தும் ஏற்பாட்டை, இந்திய வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டிருந்தது. பின்னர் அந்தப் பேச்சு கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## விஞ்ஞானக் கற்கைக்கு விண்ணப்பம் கோரல்

திறந்த பல்கலைக்கழக உணவு விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உணவு விஞ்ஞானம் தொடர்பாக செயன்முறை அறிவும் தேவைப்படுவோர் மற்றும் உணவுத்தொழிற்சாலையில் தொழில்புரிவோர் இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும். இதற்கு விண்ணப்பிப்போர் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் இரசாயனவியல் உட்பட உயிர்த்தொகுதி தொழில்நுட்பத்தில் சித்தி பெற்றிருத்தல் அல்லது திறந்த பல்கலைக்கழக அடிப்படைக் கற்கை நெறியில் இரசாயனவியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.

இக்கற்கைநெறிக்கு எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்பாக இணையவழியில் விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விவரங்களை 0112881371 அல்லது 0706993134 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் -என்றார். (ஒ-4)

## நினைவுப்பேருரையும் மரக்கன்று நடுகையும்

யாழ்ப்பாணம், நவ.2

கலாநிதி கனகராசாவின் 94 ஆவது நினைவுப்பேருரையும் யாழ்.மாவட்ட சாரணர் சங்கத்தின் மரக்கன்று நடுகை செய்யும் நிகழ்வும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். சன்மார்க்க வித்தியாலயத்தில் இடம் பெறும்.

யாழ்.மாவட்ட சாரணர் ஆணையாளர் இ.தவகோபால் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில்,பிரதம விருந்தினராக யாழ்.ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் தலைவர் மருத்துவக் கலாநிதி ச.நிர்மலன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சாரண ஆணையாளர் மா.புவனேந்திரன் ஆகியோர் கலந்துகொள்வர். (ஒ-4)




## பொலிஸ் பாதுகாப்புடன் மரங்கள் வெட்டிச் சரிப்பு

யாழ்ப்பாணம், நவ.2

நவாலியில் பொலிஸாரின் பாதுகாப்புடன், பழமையான மரங்கள் சில வெட்டி வீழ்த்தப்படுகின்றன.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவாலி சென். பீற்றேஸ் தேவாலயத்தின் அருகே, 786 தடவழிப் பாதையில் அமைந்துள்ள பழமை வாய்ந்த மரங்களே இவ்வாறு வெட்டப்பட்டு வருகின்றன.

நவாலிப் பகுதியில் உள்ள பிரதான வீதி புனரமைப்புக்காக வீதியில் இருக்கின்ற மரங்கள் வெட்டப்படுகின்றன என்று தெரிவிக்கப் படுகின்றது.

எனினும் இதற்கு அந்தப் பகுதி மக்கள் சிலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அதனால் பொலிஸ் பாதுகாப்புடன் மரங்களைத் தறிக்கும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. (ஒ-4-125)

## பண்டோரா ஆவணங்களில் மற்றுமொரு இலங்கையர்!

கொழும்பு, நவ. 2

பண்டோரா ஆவணங்களில் மேலுமொரு இலங்கைத் தமிழர் பற்றிய விவரங்கள் கசிந்துள்ளன. பிரிட்டிஷ் விர்ஜின் தீவுகளில் பதிவுசெய்யப்பட்ட ஒரு அறக்கட்டளைக்குச் சொந்தமான சிங்கப்பூரை தளமாகக் கொண்ட நிறுவனத்திற்கு நிதியளித்தார் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம், ஜனவரி 2008ஆம் ஆண்டில் ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டது. எனினும் குறித்த நபரின் பணக் கையாடல்கள் பற்றி எந்தத் தகவலும் இல்லை. (ம)

## விண்ணப்பம் கோரல்

திறந்தபல்கலைக்கழக முன்பள்ளிக்கல்வியில் உயர்சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

18வயதுக்கு மேற்பட்ட, முன்பள்ளிக்கல்வியில் சான்றிதழ்உடையவர்கள் எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்பாக இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம். (ஒ-4)

## நேர்முகத் தேர்வு

சாவகச்சேரி நவ.2

இளம் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு காணி கோரி விண்ணப்பித்தவர்களில் மேலும் ஒரு தொகுதியினருக்கான நேர்முகத் தேர்வு இன்று தொடக்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலகம் மற்றும் சாவகச்சேரி சிவன்கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபம் ஆகியவற்றில் நேர்முகத் தேர்வு இடம்பெறவுள்ளன.

தொழில் முயற்சிக்காக பிரதேசத்தில் 20 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் விண்ணப்பித்திருந்த நிலையில் யாழ்.மாவட்டத்தில் காணி கோரி விண்ணப்பித்தவர்களுக்கு ஏற்கனவே நேர்முகத் தேர்வு இடம் பெற்றுள்ளது.

காணிக்கு விண்ணப்பித்தவர்கள் ஆவணங்களுடன் தொழில் முயற்சி தொடர்பான விவரங்களையும் கொண்டுவருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-9)

## பெண்ணிடம் சில்மிசம் பொலிஸுக்கு மறியல்



கொழும்பு, நவ.2

மனநலம் பாதிக்கப்பட்ட பெண் ஒருவரிடம் தவறாக நடக்க முயன்றார் என்ற குற்றச்சாட்டில் அரச புலனாய்வுப் பிரிவுப் பொலிஸ் கொன்ஸ்டபில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் அத்தனகல்ல நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

மாவனெல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவரே கைது செய்யப்பட்டுள்ளார். பஸ்யாலையில் மனநலம் பாதிக்கப்பட்ட பெண் ஒருவரை பாழடைந்த இடத்துக்கு அழைத்துச் சென்று தவறாக நடக்க முயன்றார் என்று சந்தேகநபர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. பொலிஸ் அவசர இலக்கத்துக்கு கிடைத்த தகவலையடுத்து சந்தேக நபர் நிட்டம்புவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## முதுகலைமாணி கற்கை நெறிக்கு விண்ணப்பங்கோரல்

கொழும்பு,நவ.2

திறந்த பல்கலைக்கழக கல்வியியலில் முதுகலைமாணி பட்டம் இரண்டு ஆண்டுகள் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

கல்வியியல் முதுமாணிப்பட்டம் பெற்றவர்கள் ஜி.பி.ஏ 3 தரநிலை பெற்றவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

தமிழ்,ஆங்கிலம்,சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் இந்தக் கற்கை நெறி கற்பிக்கப்படும்.

https://ums.omis.site என்ற இணையத்தளம் ஊடாக, எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். (ஒ-4)

## பயணத்தை ஆரம்பித்த நாளிலேயே விபத்து

கொழும்பு,நவ.2

இரண்டு ரயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதி நேற்று விபத்துக்குள்ளாகின.

ராகம மற்றும் பெரலந்த ஆகிய இடங்களுக்கான ரயில்களே விபத்துக்குள்ளாகின.

விபத்தில் எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை.

அதேவேளை பிரதான ரயில் மார்க்கத்தின் தெமட்டகொட பல்லேவெல ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையிலான கடவையில் சமிக்ஞை பிரச்சினை காரணமாக ரயில் சேவைகள் தாமதமடைந்தன.

சுமார் 6 மாதங்கள் இடைநிறுத்தப்பட்டிருந்த மாகாணங்களுக்கு இடையிலான ரயில் சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உரப்பிரச்சினையும் இனப்பிரச்சினையும்

ஸ்கொட்லாந்தின்- கிளாஸ்கோநகரில் இடம்பெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் விசேட கருத்தரங்கில், உரையாற்றிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இலங்கையின் உரப் பிரச்சினை தொடர்பாகவும் தொட்டுச்சென்றிருக்கிறார்.

இயற்கையோடு இணைந்த நிலையான அபிவிருத்தியைக் கொண்ட புதிய விவசாயப் புரட்சி அவசியம் என்று கூறியுள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, இரசாயனப் பசளை இறக்குமதியைக் குறைப்பதற்கும் சேதன விவசாயத்தை அதிளவில் ஊக்குவிப்பதற்கும் தமது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அதேநேரம் அவர் இன்னொரு விடயத்தையும் குறிப்பிட்டிருக்கிறார்; தங்களது இந்தச் செயற்பாட்டுக்கு பாராட்டுக் கிடைத்தாலும், விமர்சனங்களையும் எதிர்ப்புக்களையும் முகங்கொடுத்து வருகின்றோம். அதிகளவில் பசளையைப் பயன்படுத்தி விளைச்சலை அதிகரித்துக்கொள்ளும் வழிவகைகளைக் கையாளப் பழகியிருக்கும் விவசாயிகளும் இதை எதிர்க்கிறார்கள் என்று கவலைப்பட்டுள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.

ஜனாதிபதியின் இந்தக்கூற்று, அவர் இன்னமும் விவசாயிகளின் பிரச்சினையைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை அல்லது புரிந்துகொள்ள முயலவில்லை என்பதையே வெளிப்படுத்துகின்றது. விவசாயிகள் சேதனப்பசளைப் பயன்பாட்டுக்கோ, இயற்கை விவசாயத்துக்கோ எதிரானவர்கள் அல்லர், அரசின் முன்யோசனை அற்ற, திடீர்த் தீர்மானங்களே விவசாயிகளை வீதிக்கு இறக்கியுள்ளது என்பதை ஜனாதிபதியும், அரசும் விளங்கிக்கொள்ளவேண்டும்.


இலங்கையில் இப்போது பயிரிடப்படும் பயிர் வகைகளில் பெரும்பாலானவை கலப்பினப் பயிர்வகைகளே. குறைந்த காலப் பகுதியில் விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று, கடந்த காலங்களில் விவசாயிகள் கலப்பினப் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ள ஊக்குவிக்கப்பட்டனர். விவசாயத் திணைக்களத்தால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் நாற்றுக்கள், விதைகள் போன்றனவும் கலப்பினப் பயிர்களே. கலப்பினப் பயிர்கள் உரிய உரங்கள் இன்றி சரியான விளைச்சலைத் தரா.

இரசாயன உரப்பாவனையை நிறுத்துவதற்கான முடிவை எடுக்கும்போது, அரசு அதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்து முடித்திருக்க வேண்டும். விவசாயிகளுக்கான மாற்று இயற்கை உரங்கள் தட்டுப்பாடின்றிக் கிடைப்பதை அரசு உறுதி செய்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு நடக்கவில்லை. விவசாயத்துறை சார்ந்த அமைச்சும், திணைக்களங்களும்கூட இந்த விளைவுகளை அரசில் இருப்போருக்குத் தெளிவுபடுத்தவில்லை ஜனாதிபதி உத்தரவிட்டார் என்பதற்காக எந்தவித ஆராய்வுகளையும் நடத்தாது விவசாயிகளின் கருத்துக்களை -பிரச்சினைகளை ஆராயாது, பலவந்தமாக முடிவுகளை விவசாயிகளின் மேல் திணித்ததன் விளைவே இப்போது நாடு முழுவதும் வெடித்துள்ள விவசாயிகளின் போராட்டம்.

இப்போது விவசாயச் செய்கைகள் அனைத்தும் உரங்கள் இன்றி அழியும் நிலையில் இருக்கின்றன. ஏற்கனவே பொருளாதார நெருக்கடியில் இருக்கும் விவசாயிகள் இப்போது மீள முடியாத நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றனர். அவர்களுக்கான இழப்பீடுகள், மானியங்கள் தொடர்பாக அரசிடம் எந்தத் திட்டமும் இல்லை. இப்படியான நிலைமையில் விவசாயிகளின் மீது குற்றச்சாட்டை முன்வைப்பது அபத்தமானது.

நாடு இயற்கை விவசாயத்துக்குமாறவேண்டும் எனில் அது ஒரு நீண்ட காலப் பொறிமுறை மூலமே முடியும். இரசாயன உர இறக்குமதியை நிறுத்தியவுடன், இயற்கை விவசாயத்துக்கு மாறிவிட முடியும் என்பது ஒரு முட்டாள்தனமானவாதம். இயற்கை விவசாயத்துக்கு மாறிய நாடுகளை உதாரணம் காட்டுபவர்கள், அந்த நாடுகள் இயற்கை விவசாயத்துக்குத் திரும்ப எடுத்துக் கொண்ட காலத்தையும், அதற்காக இந்த நாடுகள் இழந்தவற்றையும் நினைவில் கொள்ள வேண்டும்.

இயற்கை விவசாயத்துக்குத் திரும்ப வேண்டுமானால் முதலில் விவசாய அமைச்சும், விவசாயத்துறை சார்ந்த திணைக்களங்களும் இன்னமும் வினைத்திறன் கொண்டவையாக மாற்றப்பட வேண்டும். விவசாயம் சார்ந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். சேதனப்பசளை உற்பத்திகளை அதிகரிக்கவேண்டும். இயற்கை விவசாயம் சார்ந்த அறிவூட்டல்களை மேற்கொள்ளவேண்டும். அரசால் இயற்கை விவசாயப் பண்ணைகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இயற்கை விவசாயத்தால் கிட்டும் இலாப, நஷ்டங்கள் ஆராயப்பட்டிருக்கவேண்டும். இவை எவையுமே இன்றி அதிக விளைச்சலுக்காகவே விவசாயிகள் இயற்கை விவசாயத்தை எதிர்க்கிறார்கள் என்று ஜனாதிபதி கூறுவது,உரப்பிரச்சினை தொடர்பில் அவரது நுனிப்புல் மேய்ந்த குணத்தையே காட்டுகின்றன. ஒரு பிரச்சினையின் அடிப்படையையே அறியமுடியாதவரால் எப்படி அந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்? இனப்பிரச்சினையிலும் இதேபோன்று அடிப்படைக் காரணியை பேரின ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ளாமையாலேயே இன்னமும் அது அணையாத நெருப்பாகத் தகிக்கிறது. இப்போது உரப்பிரச்சினைக்கும் அதே கதைதான்...!




# எரிபொருள் விலை மீண்டும் எகிறும்

கொழும்பு, நவ. 2



**“கடும் நெருக்கடிக்கு மத்தியிலேயே அரசு பயணித்துக்கொண்டிருக்கிறது. வருமான வழிகள் இல்லாமற்போயுள்ளன. எனவே, எரிபொருள் உட்பட பொருள்களின் விலைகள் மேலும் அதிகரிக்கப்படலாம்” என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.**

நுவரெலியா மாவட்டத்துக் குட்பட்ட, பூண்டுலோயா கொத்மலை பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

“சுற்றுலாத்துறை மூலமே பிரதான வருமானம் இந்நாட்டுக்கு வந்தது. அது இன்று பூஜ்ஜிய மட்டத்தில் உள்ளது. வெளிநாட்டுபணியாளர்களால் அனுப்பப்படும் பணமும் இல்லாமற்போயுள்ளது. பலர் நாடு திரும்பியுள் ளனர். மேலும் சிலர் தொழிலை இழந்துள்ளனர். மூன்றாவதாக ஆடை ஏற்றுமதியும் பாதிக்கப்பட்டுள்ளது. கப்பல் கட்டணம் நூற்றுக்கு 300 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. நாடு முடக்கப்பட்டதால் நாளாந்தம் 450 கோடி ரூபா இழப்பு. மாதக் கணக்கில் நாடு முடக்கப்பட்டிருந் தது. கடும் நெருக்கடிக்கு மத்தியிலேயே அரசு பயணிக்கின்றது. எதிர்காலத்தில் எரிபொருள் உட்பட பொருள்களின் விலைகள் அதிகரிக்கும். இதற்கு நாம் முகங்கொடுத்தாக வேண்டும். உல களவில் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அடுத்த வருட இறுதிக்கு பிறகு பொருளாதார வளர்ச்சியை நோக்கி எமது நாடு பயணிக்கக்கூடியதாக இருக்கும்” - என்றார். (ம-44)

# சுமார் 500 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேக்கம்

கொழும்பு,நவ.2

100 சீனிக் கொள்கலன்கள் உள்ளிட்ட சுமார் 500 கொள்கலன்கள் கொழும்புத்துறைமுகத்தில் தேக்கமடைந்துள்ளன என்று இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதியாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவிக்கையில்:

சீனிக் கொள்கலன்கள் மாத்திரமன்றி ஆயிரக்கணக்கான மெற்றிக் தொன் பொருள்களை உள்ளடக்கிய சுமார் 500 கொள்கலன்கள் தற்போது துறைமுகத்தில் தேங்கியுள்ளன. இது ஒரு பெரிய குழுவுக்குச் சொந்தமானது.

சீனிக் கொள்கலன்கள் துறைமுகத்தில் சிக்கியுள்ளதால், இறக்குமதியாளர்களிடம் சீனி இருப்பு இல்லை. சீனியைப் பதுக்கி வைத்திருந்தவர்கள் அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர்.

தற்போது சந்தையில் சீனிக்கு கடும் தட்டுப்பாடு நிலவியுள்ளது. சீனி இருப்பு உள்ள கடைகளில்கூட ஒரு கிலோகிராம் சீனி 155 ரூபா முதல் 160 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

முன்னர் போன்று வர்த்தக வங்கிகள் டொலரை வழங்கியிருந்தால், நாளாந்தம் கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டிருக்கும். டொலர் தட்டுப்பாடு அனைத்து இறக்குமதியாளர்களுக்கும் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது - என்றார். (ஒ-4)

நவம்பர் 2021

**வடமாகாண மரநடுகை மாதம்**

“நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றை நட்டதன் பயனாகவே இன்று இன்னொருவர் அந்த மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்”

– வாரன் பஃவெற்



# நிரந்தர நியமனத்தை வழங்கக் கோரி சுகாதாரத் தொண்டர்கள் போராட்டம்

**யாழ்ப்பாணம்,நவ.2**

**நிரந்தர நியமனத்தை முழுமையாக வழங்கக்கோரி, வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள், வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



வடக்கு மாகாணத்தில் நீண்ட காலமாக சுகாதாரத் தொண்டர்களாக பணியாற்றும் 970 பேரில் 349 பேருக்கு அவர்களது சேவைக் கால அடிப்படையில் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. ஏனையோருக்கு நியமனம் வழங்கப்படவில்லை.

இவ்வாறு நியமனத்தில் புறக்கணிக்கப்பட்ட சுகாதாரத் தொண்டர்களே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"349 பேருக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளபோதும், அவர்களுக்கான நியமனம் நிறுத்தப்பட்டுள்ளது.

எனவே வடக்கு மாகாணத்தில் உள்ள 970 சுகாதாரத் தொண்டர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு புதிய ஆளுநர் நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (4-20)

# இயக்கமற்றுள்ள இடமாற்ற சபை

## ஆசிரியர்களுக்கு அநீதி

தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்றச் சபை இயக்கமற்று இருப்பதால், எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக, இலங்கை ஆசிரியர் சேவைச்சங்கம், கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் உப தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவிக்கையில்,

கல்வி அமைச்சின் நிறுவனச் செயற்பாடுகள் மற்றும் பாடசாலைகளின் செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பியுள்ள போதும், தேசியப் பாடசாலை ஆசிரியர் இடமாற்றச் சபையின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை.

இதனால் தேசியப் பாடசாலை ஆசிரிய இடமாற்றப் பணிப்பாளர் உட்பட்ட அதிகாரிகள் தன்னிச்சையான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

அரசியல் அழுத்தம் மற்றும் சுய நெருக்கத்தின் அடிப்படையில் ஆசிரிய இடமாற்றம் நடைபெறுகின்றது. உரிய தகைமையுடன் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொடுக்க முடியுமாக இருந்தும், அவற்றைப் புறந்தள்ளியுள்ளனர். ஆசிரியர்களை அச்சுறுத்தி அழுத்தம் பிரயோகிக்கின்றனர்.

இடமாற்றம் கோரி ஆசிரியர் இடமாற்றப் பிரிவுக்குச் செல்லும் ஆசிரியர்களுடன் கீழ்த்தரமாக நடந்து கொள்கின்றனர். ஆசிரியர்களின் இடமாற்ற விண்ணப்பப்படிவம் மற்றும் மேன்முறையீடு அடங்கிய ஆவணங்கள் தவறான இடங்களுக்கு மாறிச் செல்கின்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

எனவே தேசியப் பாடசாலை ஆசிரியர் இடமாற்றச் சபையை உடனடியாகக் கூட்டி இடமாற்றச் சட்டத்துக்கு உட்பட்ட வகையில் நடைபெற நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றார். (ஒ- 4-159)

# கொள்ளையிடச் சென்றவர் மக்களால் அடித்துக்கொலை

கொழும்பு,நவ.2

வீடொன்றில் கொள்ளையிடச் சென்ற மூவரில் ஒருவர், பிரதேச மக்களால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பின் புறநகர் பகுதியான முல்லேரியா மாளிகா கொடல்லப் பிரதேசத்தில் நடந்துள்ளது.

கொள்ளையர்கள் வீட்டில் இருந்தோரை அச்சுறுத்திப் பொருள்களைக் கொள்ளையிட்டுக் கொண்டிருந்தனர்.

வீட்டார் சத்தமிடுவதைக் கேட்ட அயல் வீடுகளில் உள்ளவர்கள் அங்கு சென்று கொள்ளையர்களைப் பிடித்துத் தாக்கியுள்ளனர். பிரதேசவாசிகளின் தாக்குதலில் படுகாயமடைந்த கொள்ளையர்களில் ஒருவர், கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். ஏனைய இரண்டு சந்தேகநபர்களும் தப்பிச் சென்றுள்ளனர். தாக்குதலில் உயிரிழந்த நபர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-4)

# கோப்பாயில் கசிப்பு உற்பத்தி; சந்தேகத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், நவ 2

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழு பொக்கணைப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தில் கோப்பாய் பொலிஸாரால் நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அந்தப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தின், யாழ்ப்பாணம் விசேட பொலிஸ் படையணிக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் இடத்தை முற்றுகையிட்டனர்.

இதன்போது கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்திய உபகரணங்களும், 20 லீற்றர் கசிப்பும் 100 லீற்றர் கோடாவும் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலும் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்து அவருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ச-125)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ். மத்திய கல்லூரியில் கல்வியமைச்சால் நடைமுறைப்படுத்தப்படும் 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் தொழிற்கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. சாதாரண தரம் சித்தி அல்லது சித்தியின்மையைக் கருத்திற்கொள்ளாது 2019 அல்லது 2020 இல் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியோர் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்களை கல்வியமைச்சின் இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்யலாம் அல்லது கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து, எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மத்திய கல்லூரியின் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ய)

# அணுவாயுத உடன்படிக்கை பசுபிக் நாடுகளுக்கு ஆபத்து

## சீனா எச்சரிக்கை

கொழும்பு, நவ.2

அவுஸ்ரேலியாவுக்கு நீர்மூழ்கிகளை வழங்குவதற்கு அமெரிக்கா மற்றும் பிரிட்டன் மேற்கொண்டுள்ள முயற்சிகளால், இந்தோ பசுபிக் நாடுகள் எவ்வேளையிலும் ஆபத்தை எதிர்கொள்ளக்கூடும் என சீனா எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கைக்கான சீனத் தூதுவர் ஜி ஜென்காங் வெளியிட்டுள்ள அறிக்கையில் அக்யூஸ் உடன்படிக்கை அணுவாயுதப் பரவலுக்கான சாத்தியக்கூறுகளை அதிகரித்துள்ளது. இது அணுவாயுத பரவல் உடன்படிக்கையை மீறும் நடவடிக்கை.

அமெரிக்கா, பிரிட்டன், ஈரான் மற்றும் வடகொரியா அணுவாயுதங்களை வைத்திருப்பதற்கு அனுமதிப்பதில்லை. அதேவேளை இஸ்ரேல் அணுவாயுதங்களை உற்பத்தி செய்வதற்கு அனுமதிக்கின்றது. அவுஸ்ரேலியாவுக்கு அணுநீர்மூழ்கியை வழங்குகின்றது. ஆனால் சீனா தனது அணுத்திறனை குறிப்பிட்ட அளவிலேயே பேணிவருகின்றது-என்றார். (ஒ-4)

# மேய்ச்சல் தரவையில்லை கால்நடைகள் அந்தரிப்பு

கிளிநொச்சி, நவ.2

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரவை ஒதுக்கப்படாததால், பண்ணையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். கால்நடைகளும் உணவு, தண்ணீரின்றி அலைந்து திரிவதை அவதானிக்க முடிகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் காலபோக பயிற்செய்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் கால்நடை உரிமையாளர்கள், கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். தற்போது மழைக் காலம் ஆரம்பித்துள்ளதால், கால்நடைகளைப் பராமரிக்க முடியாது பண்ணையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த வருடம் பல கால்நடைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. எனினும் எவருக்கும் இழப்பீடு வழங்கப்படவில்லை. எனவே இந்தப் பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4)

# கட்டுக்கரைக் குளத்தின் நீர்மட்டம் அதிகரிப்பு



மன்னார், நவ.2

மன்னார், கட்டுக்கரைக் குளத்தின் நீர்மட்டம் 10 அடியாக உயர்ந்துள்ளது என்று மன்னார் நீர்ப்பாசனப் பணிப்பாளர் சி.யோகராசா தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் பெய்த கடும் மழையின் காரணமாக மல்வத்து ஓயாவிலிருந்து நீர் வரத்து அதிகரித்துள்ளமையால் கட்டுக்கரைக் குளத்தில் 7 அடியாக இருந்த நீர்மட்டம் தற்போது 10 அடியாக உயர்வடைந்துள்ளது.

இன்னும் 1 அடி 3 அங்குலம் வரை நீர்மட்டம் அதிகரித்தால் கட்டுக்கரைக் குளம் வான் பாயும் நிலை ஏற்படும்.

மேலும் மன்னார் மாவட்டத்திலுள்ள சிறு குளங்களில் மழை நீரைச் சேகரிக்க வேண்டும் என்பதால் கட்டுக்கரைக் குளத்திலிருந்து நீர் விநியோகிக்கவில்லை என்று மன்னார் மாவட்ட நீர்ப்பாசனப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ய-213)

# சீனாவின் காலனிதான் இலங்கை

ஆர்.பிரகாஷ்

நீண்டதும் நெடியதுமான உள்நாட்டுப் போரின் பின்னர் 85 வீதமான உட்கட்டமைப்புக்கு சீனாவை நம்பியிருந்த இலங்கை, இன்று அதன் விளைவுகளை மெல்லமெல்ல அறுவடை செய்யத் தயாராகின்றது. இன்னும் தெளிவாகச் சொல்வதாயின் சீனாவின் காலனித்துவத் தேசமாக இலங்கை மாறுவதற்குரிய வாய்ப்புக்கள் தென்பட ஆரம்பித்துள்ளன. இலங்கையின் முக்கிய வங்கியான மக்கள் வங்கியை சீனா கறுப்புப் பட்டியலில் இணைத்தமையும் அதனுடன் இணைந்த அண்மைய நகர்வுகளும் இதையே கட்டியம் செய்கின்றன.




## அம்பாந்தோட்டையில் ஆரம்பித்த கதை

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்ததன் பின்னர், இலங்கைக்குள் பல்வேறு அபிவிருத்திகளை கட்டியமைப்பது என்ற பிம்பத்தை ராஜபக்ச வலிந்து ஏற்படுத்தினார். தனது சொந்த இடமான அம்பாந்தோட்டையில் ஒரு துறைமுகத்தை அமைப்பதற்கும் அவர் திட்டமிட்டு அதற்குரிய நகர்வுகளை முன்னெடுத்தார். அம்பாந்தோட்டையில் துறைமுகம் அமைப்பதென்பது தேவையற்ற வேலை என்றும், கொழும்புத் துறைமுகம் நாட்டில் முக்கிய முனையாக இருக்கையில் இந்தத் துறைமுகம் தேவையற்றது. கொழும்புத் துறைமுகத்தின் இலாபத்தில் வீழ்ச்சி ஏற்படும் என்று எதிர்க்கட்சிகள் விமர்சித்தன. உலக நாடுகளும் இந்தத் திட்டத்துக்கு நிதி வழங்கத் தயாரில்லை. அப்போது 85 வீதமான நிதியை அந்தத் துறைமுகத்தை அமைப்பதற்காக வழங்குவதற்கு முன்வந்தது சீனா. வெறும் 15 வீதமான நிதியை இலங்கை வழங்கினால் போது மானது. இவ்வளவும்



போதாதா ராஜபக்சக்களுக்கு. திட்டம் தயார்- நிதி தயார்- எழும்பியது துறைமுகம். கூடவே இலங்கை மீதான சீனத்தின் பிடியும், இலங்கையின் கடன்சுமையும் சேர்ந்தே எழும்பியது.

## கைமாறிய ஆட்சியும் குத்தகை பரிமாற்றமும்

2015ஆம் ஆண்டு ராஜபக்ச வீட்டுக்கு அனுப்பப்பட்டு மைத்திரிபால சிறிசேன ஆட்சியமைத்தபோது, இந்தத் துறைமுகத்துக்காகப்பட்ட கடனைக் கட்டிக்கொண்டிருப்பதைப் பார்க்கிலும் துறைமுகத்தை குத்தகைக்கு வழங்கிவிடுவது சிறந்தது என்று 99 வருட குத்தகைக்கு அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு தாரைவார்க்கப்பட்டது. அதேநேரம் சீனாவுடன் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொழும்பு துறைமுக நகரம் துரித கதியில் கட்டப்பட்டுக் கொண்டிருந்தது. தற்போது ராஜபக்சக்களிடம் மீண்டும் ஆட்சி கைமாற்றப்பட்டுள்ள நிலையில், கொழும்புத் துறைமுக நகரும் 99 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

## ஏன் குத்தகைக்கு வழங்கப்பட்டது.

குத்தகைக்கு வழங்கப்படுவதாக ஒப்பந்தம் ஆரம்பிக்கப்படவில்லைதானே என்று உங்களில் பலரும் எண்ணலாம். குத்தகைக்கு வழங்கப்படுவதாகக் குறிப்பிட்டு ஒப்பந்தம் ஆரம்பிக்கப்படவில்லைதான். ஆனால், கடனைக் கட்டிக்கொண்டிருக்கக்கூடிய வல்லமை இலங்கையிடம் இல்லை. நாட்டின் உள்நாட்டு உற்பத்தியில் 85 வீதமான பங்கு கடன்களைக் கட்டிக்கொண்டிருப்பதற்கே சரியாகிவிடும்போது எங்கிருந்து இலங்கைக்கே உரித்தான பிரத்தியேகச் செலவுகளைப் பார்த்துக்கொள்வது. ஆதலால்தான் குத்தகை என்ற தெரிவை நல்லாட்சிக்காரர்களும் சரி, ராஜபக்சக்களும் சரி பரஸ்பரம் கைக்கொண்டனர். ஆக, கொழும்பு துறைமுக நகரம், அதற்கு அண்டிய பல நூறு ஹெக்ரேயர்கள் மற்றும் அம்பாந்தோட்டைத் துறைமுகம் என்பனவற்றில் அடுத்த 99 ஆண்டுகளில் சீனக்கொடி தாராளமாகப் பறக்கலாம் என்ற நிலை.

## பொருளாதார நெருக்கடியும் சீனாவின் நுட்ப அரசியலும்

தேவையற்ற கட்டுமானங்கள், குருவியின் தலையில் பனங்காயை வைப்பதுபோன்று அளவுக்கு அதிகமான கடன்களால் இன்று இலங்கையின் பொருளாதாரம் ஆட்டம் கண்டுள்ளது. டொலர் கையிருப்பு இல்லாத நிலை. வங்குரோத்து நிலையை நோக்கி நாடு நகர்ந்துகொண்டு செல்கின்றது. இத்தகையதொரு பின்னணியில்தான் பல்வேறு சட்டங்களை இலங்கை அரசு கொண்டுவந்தது. வாகனங்கள் இறக்குமதிக்குத் தடை, மஞ்சளுக்குத் தடை, ஆடை இறக்குமதிக்குத் தடை என்று இந்தத் தடைப்பட்டியல்கள் நீண்டன. உரத்துக்கு விதிக்கப்பட்ட தடையும் இதே வகையறாதான். ஆனால், மக்களின் உடல்நலனில் அக்கறைகொண்டுதான் இரசாயன உரம் தடைசெய்யப்படுகின்றது என்று சப்பைக்கட்டு கட்டியது கோத்தா 'அன்ட் கோ'. (மக்கள் நலனில் அக்கறைகொண்டுதான் உரத்துக்குத் தடையென்றால், இறக்குமதி செய்யப்படும் அரிசிகள் எந்த உரத்தில் உற்பத்தி செய்யப்பட்டவை? என்ற கேள்விக்கு அரசிடம் பதில் இல்லை என்பது வேறு கதை).

இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்குத் தடை என்றால், நாட்டில் விளைச்சல் பாதிக்கும். இதனால் உணவுப் பற்றாக்குறை ஏற்படும்.

இதுவொன்றும் சீனாவிடம் இருந்து வாங்கிய கடன் போன்று நீண்டகாலத்தில் வெளிச்சமாகப்போகும் விடயம் இல்லை. அடுத்த 6 மாதத்தில் அரசின் முட்டாள்தனம் வெளிச்சத்துக்கு வந்துவிடும். ஆதலால், பரிகாரம் தேடவேண்டிய நிலைமை அரசுக்கு. ஆகவே, இதற்கும் சீனாவை நாடியோடியது அரசு. இயற்கை உரத்தைப் பயன்படுத்தினாலும் விளைச்சலைப் பெருக்கக்கூடிய திரவத்தை இறக்குமதி செய்வதாகத் திட்டம். 'சிவெய்ன் பயோ டெக்' நிறுவனத்திடம் இருந்து இந்த இறக்குதி திட்டமிடப்பட்டது. ஆனால், அந்த ஊக்கியில் ஒருவகை பக்ரீறியா உள்ளது என்றும் அது எமது மண்ணுக்குப் பொருந்தாது என்றும் ஆய்வுகள் எண்பித்தன. இதில்தான் சீனாவின் முகம் இலங்கைக்குத் தெரிந்தது.

## சீனாவின் கறுப்புப் பட்டியலில் இலங்கையின் அரச வங்கி

சீன உர ஊக்கி இலங்கைக்கு ஒவ்வாது என்று முடிவெடுப்பதற்குள் அந்த ஊக்கிகள் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அவை கொழும்புத் துறைமுகத்தில் வந்தடைந்த நிலையிலேயே அந்த ஊக்கிகளை வேண்டாம் என்று இலங்கை அரசு அறிவித்தது. 'பொருள் கிடைத்ததும் பணம் செலுத்தும்' வகையில் ஒப்பந்தம் கைச்சாத்தானதால், இலங்கை பணம் கொடுக்க மறுத்தது. இதன் விளைவாகவே மக்கள் வங்கியை சீனா கறுப்புப் பட்டியலில் வைத்தது. ஓர் உரப் பிரச்சினை சீனத்தின் ஆக்கிரமிப்பு மனோநிலையை அப்பட்டமாகவே காட்டிவிட்டது.

இலங்கை சீனத்திடம் இருந்து பெற்றுள்ள கடன்கள் ஏராளம். இனி அந்தக் கடன்களுக்கான தவணைகள் தாமதிக்கும் பட்சத்தில், மேற்கொண்டு கடன்களால் இலங்கையின் கழுத்தை சீனா இறுக்கும் பட்சத்தில், இலங்கை அந்தத் தொகையைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் இலங்கையின் அத்தனை வங்கிகளையும் சீனா கறுப்புப் பட்டியலில் இணைக்க எவ்வளவு காலமெடுக்கும்? சீனத்தால் ஏற்படுத்தப்படும் இந்தக் கறுப்புப் பட்டியல் காரணமாக இலங்கைக்கு கிட்டும் உதவிகள் தன் மூலமாகத்தான் நிறைவேற்றப்பட வேண்டும் என்று சீனா அறிவிக்க எவ்வளவு நேரமெடுக்கும்? இங்குள்ள தன் குத்தகை நிலங்களை சீனாவுக்கான தன் உற்பத்திக் கிளைகளாக மாற்றினால் அதற்கு எதிராக வினையாற்றக்கூடிய என்ன இயலுமை இலங்கையிடம் உள்ளது?. காலம்தான் பதில் தரவேண்டும்.

---

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். மன நிறைவு வரும். தொழில், பணியில் முன்னேற்றம் அதிகரிக்கும். கல்வி சிறக்கும். எடுத்த முயற்சி ஒன்று கைகூடும். சுபச்செய்தி வரும்.

**இடபம்:** உங்களின் திட்டம் வெற்றி பெறும். நண்பர்களின் ஆதரவு கிட்டும். நீங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக நல்ல முடிவுவரும். தடை கள் அனைத்தும் நீங்கும்.

**மிதுனம்:** உங்களை எதிர்த்தவர் மனம் மாறுவார். இனிமையான நாள். ஏற்ற இறக்கமான சூழ்நிலைகள் இன்றிலிருந்து மாறும். நினைத்து மகிழுத்தக்க அனுபவம் ஒன்று கிடைக்கும்.

**கடகம்:** நண்பர் ஒருவருடன் இருந்த சண்டை முடிவுக்கு வரும்.எதிர்பாராத திருப்பம் ஒன்று ஏற்படும். மகிழ்வான நாள். வீடு, இடம் வாங்கும் முயற்சியில் முன்னேற்றம் கூடும்.எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**சிம்மம்:** நட்பு வட்டம் விரிவடைந்தாலும் அதுபற்றி கவனமாயிருங்கள். தந்தைக்கு இருந்து வந்த நோய் அகலும். மாணவர்கள் மகிழ்வர். பணி பற்றிய முயற்சி ஒன்று நல்ல பலன் தரும். நேர விரயம் ஏற்படும்.

**கன்னி:** காலை நேரத்திலேயே பணம் வந்து மகிழ்ச்சி தரும். செல்வாக்கு மிக்க ஒருவருடன் திடீர் சந்திப்பு நிகழும். பணி, தொழிலில் நாட்டம் அதிகரிக்கும். நிம்மதியான நாள்.

**துலாம்:** அதிகாலையில் வரும் செய்தி ஒன்று ஆனந்தம் அளிக்கும். உங்கள் முன்னேற்றத்துக்கு வித்திட்ட ஒருவரைத் சந்திப்பீர்கள். தன்னம்பிக்கையோடு பணிபுரிவீர்கள். மனநிறைவு வரும்.

**விருச்சிகம்:** கூடுதல் முயற்சியால் தடைகளை அகற்றுவீர்கள். கவலை தீரும். உறவினரால் மனதில் ஏற்பட்ட குழப்பம் ஒன்று நீங்கும். நின்றிருந்த பேச்சுவார்த்தை ஒன்று மீண்டும் தொடரக்கூடும்.

**தனுசு:** எதிர்ப்புக்களை சமாளித்து வெல்வீர்கள். மனதில் அமைதி கூடும். உடன்பிறந்தோரால் ஏற்பட்ட இடையூறு ஒன்று அகலும். குழந்தைகளால் சிறு நன்மை உண்டு. உழைப்பு பலன் தரும்.

**மகரம்:** சொத்துகளை வாங்க, விற்க முயற்சி எடுக்கும் நாள். விரோதங்கள் விலகும். கடுமையாக உழைக்க வேண்டி வரும். சமீபத்தில் முயன்ற விடயம் ஒன்று வெற்றியாக முடியும்.

**கும்பம்:** நண்பர் ஒருவர் நல்ல செய்தியைக் கொண்டு வந்து சேர்ப்பார். வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. வீண்பழி ஏற்படாதபடி கவனம் தேவை. இன்றை நிகழ்வு ஒன்று திருப்தி தரும். குதூகலமான நாள்.

**மீனம்** வருமானம் பற்றிய கவலை தீரும். புது நட்பு உருவாகும். தி... விடயம் ஒன்றில் திடீர் மாற்றம் ... நேரலாம். பணியிடத்தில் அனு... செல்வீர்கள். திட்டமிட்ட பலன் ...ரும்.

## மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதம் மாத்திரம் 273 தொற்றாளர்கள்

மன்னார், நவ.2

மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதம் 273 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலும் இந்தவருடத்தில் 2ஆயிரத்து 376 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதனால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை புதிதாக 15 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் தற்போதுவரை 23 கொரோனா சாவுகள் நிகழ்ந்துள்ளன. மன்னார் மாவட்டத்தில் இந்தவருடம் 2ஆயிரத்து 376 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக இனம்காணப்பட்டுள்ளதுடன் மாவட்டத்தில் மொத்தமாக 2ஆயிரத்து 393 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-56)

# 9ஆம் திகதியே சூரன் போர்

## தெளிவூட்டுகிறது சைவப் பேரவை

யாழ்ப்பாணம்,நவ.2

**கந்தசஷ்டி விரதம் தொடர்பான தெளிவூட்டலை, தமிழர் சைவப் பேரவை வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மகா சிவராத்திரி, பிரதோஷம், சதுர்த்தி, ஏகாதசி, நவராத்திரி, புரட்டாதிச்சனி, கேதார கௌரி விரதம், கந்தசஷ்டி, திருவெம்பாவை, பிள்ளையார் கதை என்பன சைவர்கள் கடைப்பிடிக்கும் முக்கிய விரதங்களாகும்.

இந்த விரதங்களில் கந்தசஷ்டி விரதத்தை வீடுகளிலும், ஆலயங்களிலும் உபவாசமாக இருந்து பக்தி சிரத்தையுடன் ஆறு தினங்கள் அனுஷ்டிப்பர். சஷ்டி என்பது ஆறு என்பதை குறிப்பதாகும்.

இந்த விரதம் ஐப்பசி வளர்பிறை பிரதமை முதல் சஷ்டி ஈறாக உள்ள ஆறு நாள்கள் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இந்தமுறை சஷ்டி திதியானது எதிர்வரும் 10 ஆம் திகதி பிற்பகல் 2.29 மணிக்கு முடிவடைகின்றது.

கந்தபுராணத்தை அடிப்படையாகக் கொண்டு சஷ்டி திதியிலேயே சூரன் போர் நடைபெற்று சூர சம்காரம் நிகழ்த்தப்பட வேண்டும்.

சூரன் போரானது ஆகமப் பூசை விதிகளுக்கு அமைவாக மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரையே ஆற்றப்படுதல் வேண்டும்.

எனவே எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை சூரன் போர் நடைபெற்று மறுநாள் இரவு கந்தசஷ்டி விரதத்தை முடிவுறுத்திக் கொள்ளலாம்-என்றுள்ளது. (ஒ-4-125)



## 262 குடும்பங்களுக்கு விதை உளுந்து வழங்கல்

வவுனியா, நவ.2

வவுனியா பிரதேச செயலக பிரிவிலுள்ள 262 குடும்பங்களுக்கு சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சால் விதை உளுந்து வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் நா.கமலதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் கலந்துகொண்டு விதை உளுந்தை பயனாளிகளுக்கு வழங்கி வைத்தார். (ச-18)

## பண்ணிசையும் அர்ச்சனை நிகழ்வும்

கந்தசஷ்டி விரத காலத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், எதிர்வரும் 5ஆம்திகதி மாலை 3 மணி தொடக்கம் 4 மணிவரை முருக பக்திப் பாடல்கள் இசை மற்றும் அர்ச்சனை நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதன்படி கந்தசஷ்டி முதல் நாளான வெள்ளிக்கிழமை இசைக் கலைமாணி, பண்ணிசைக் கலாவித்தகர், சங்கீத கலாவித்தகர் செல்வி சந்திரிக்கா கணேஸ்பரன், கலாவித்தகர் ஹிமாலினி சுகந்தன் இணைந்து வழங்கும் 'திருமுருக கீர்த்தனம்' நிகழ்வும், கந்தசஷ்டி இரண்டாம் நாளான சனிக்கிழமை இளம் சைவப்புலவர், திருமுறை நெறிச்செல்வர் ஜெயராசா அருள்தாஸ் குழுவினர் வழங்கும் 'முருக பக்திப் பாடல்கள்' இசை நிகழ்வும், கந்தசஷ்டி மூன்றாம் நாளான ஞாயிற்றுக்கிழமை இணுவையூர் ஞான ஏந்தல் மா.ந.பரமேஸ்வரன் குழுவினர் வழங்கும் 'திருப்புகழ் கச்சேரி' நிகழ்வும், கந்தசஷ்டி நான்காம் நாளான திங்கட்கிழமை இணுவில் சிவகாமி அம்மன் அறநெறிப் பாடசாலைக் குழுவினர் வழங்கும் 'முருக பக்திப் பஜனை' நிகழ்வும், கந்தசஷ்டி ஐந்தாம் நாளான செவ்வாய்க்கிழமை நவாலியூர் கதிர்காம முருகன் பஜனைக் குழுவினர் வழங்கும் 'முருக நாம பஜனை' நிகழ்வும், கந்தசஷ்டி நிறைவு நாளன்று கந்தரோடை, ஆலடி, வீரகத்தி விநாயகர் பண்ணிசைக் குழுவினர் வழங்கும் 'முருகா சரணம்' பஜனை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ய)



## கொடிகாமம் சந்தையில் தேங்காய் மூடைகள் திருட்டு

கொடிகாமம், நவ.2

கொடிகாமம் சந்தையில் வியாபாரிகளின் தேங்காய் மூடைகள் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கொடிகாமம் சந்தைக்குப் பொறுப்பாக இருப்பவர்களுக்கு தெரிவிக்கப்பட்ட போதும், அவர்கள் பொறுப்பற்ற விதத்தில் பதில் கூறுகின்றனர் என்று வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். சாவகச்சேரி பிரதேச சபையால் கொடிகாமம் சந்தைக்கு இரவு வேளைக்கு காவலாளி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

எனினும் சந்தையில் வைக்கப்பட்ட தேங்காய் மூடைகள் எப்படித் திருடப்பட்டன என்று அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் நீண்ட காலமாக இடம்பெற்று வருகின்றன. எனவே சந்தையில் வியாபாரப் பொருள்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை பிரதேச சபை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-159)

## மின்தடை

யாழ்ப்பாணம், நவ.2

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று 02ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். மாவட்டத்தில் கப்பூது தில்லையம்பலம், யாக்கரு நூலகம் ஆகிய இடங்களிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் 68 ஆவது பிரிவு டயலொக் கோபுரம் இரணைப்பாலை, தேவிபுரம், 18 ஆவது வி.ஐ.ஆர் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும், நாளை 03ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ் மாவட்டத்தில் சுருவில், ஊர்காவற்றுறை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படவுள்ளது என இலங்கை மின்சார சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)





## வான் பாய்கின்றது கனகாம்பிகைக்குளம்

கிளிநொச்சி, நவ.2

கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் 0.5" அங்குலத்துக்கு வான் பாயத் தொடங்கியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் கனமழை காரணமாக குளங்களின் நீர் மட்டம் வெகுவாக அதிகரித்துள்ள நிலையில் கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் 10.அடி 6 அங்குலத்துக்கு நீர் மட்டம் அதிகரித்துள்ளதால் வான்பாயத் தொடங்கியுள்ளது.

இதன் காரணமாக தர்மபுரம் மற்றும் கட்டைக்காடு ஆகிய பகுதிகளில் உள்ள சில தாழ்நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மேலும் குளத்தில் இருந்து கிளிநொச்சி நகர் வரையான தாழ்நிலப் பகுதியை அண்டி வசிக்கும் மக்கள் தற்பாது காப்புடன் இருக்குமாறு கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தால் அறிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த வெள்ள இடரை குறைக்கும் நோக்கில் இராணுவத்தினர் இயந்திரம் மூலம் வடிகால்களை சீர் செய்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-113,13)

## சிறந்த பெறுபேறுபெற்ற மாணவிக்கு மடிக்கணினி

மன்னார், நவ.2

மன்னார் மாவட்டத்தில் உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுபெற்ற மாணவியின் எதிர்கால கற்றல் நடவடிக்கையை மேம்படுத்தும் நோக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் நிதி அனுசரணையில் மடிக்கணினி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் வர்த்தகப் பிரிவில் அதி சிறந்த பெறுபேறுகளைப்பெற்று (3A) பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவி செ.மேரி ஜெனிஸ்ராவுக்கே மடிக்கணினி வழங்கப்பட்டுள்ளது. (ச)

# இரணைதீவில் மண்டபம் அமைப்பு

கிளிநொச்சி - பூநகரி - இரணைதீவில் பொது மண்டபம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. வடமாகாண அமைச்சின் நிதி உதவியில் பூநகரி பிரதேச செயலகத்தினால் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ரூ.4 மில்லியன் செலவில் இந்த வேலைகள் நடைபெறுகின்றன.

1992ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்குப் பின்னர் இரணைதீவின் அனைத்துக் கட்டுமானங்களும் சேதமடைந்தன. இந்நிலையில் அங்கு குடியேறி உள்ள 84 க்கும் மேற்பட்ட குடும்பங்களின் ஒன்று கூடலுக்காக இந்தப்பொது நோக்கு மண்டபம் அமைக்கப்படுகின்றது.

இதேவேளை- இரணைதீவில் கல், மணல் காணப்படும் நிலையில் கிடைக்கப்பெற்ற ரூ.4 மில்லியன் நிதியில் இரணைமாதா நகரில் இருந்து இரணைதீவுக்கு படகுகளில் கட்டுமானப் பொருள்களை ஏற்றிச்செல்வதில் பெருமளவு நிதி விரயமாவதாக இரணைதீவு மக்கள் தெரிவிக்கின்றனர். குறைந்தது இரணைதீவில் மணலையாவது பெற்றுப் பொதுமண்டப வேலைகளை முன்னெடுப்பதன் மூலம் நிதி மிகுதியாவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ய-13)

## மரண அறிவித்தல்

மலர்வு 23 . 05 . 1931



உதிர்வு 01 . 11 . 2021

### திருமதி சோமசுந்தரம் கனகம்மா (பொன்னார்)

கோயில்குடியிருப்பு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சோமசுந்தரம் கனகம்மா (பொன்னார்) நேற்று (01.11.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், கந்தராசாவின் அன்பு அக்காவும், தவமணியின் அன்பு மைத்துனியும், திலீபன், மைதிலி, காண்டீபன் ஆகியோரின் அன்பு அத்தையும், தேவானந்தன், உதயசந்திரிக்கா, காலஞ்சென்ற உதயச்சந்திரன் மற்றும் உமாசந்திரிக்கா, உதயகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற அனந்தி மற்றும் சற்குணராசா (குணம்), தங்கலட்சுமி, சிறிகாந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2021) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் ஒழுங்கை கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்
077 5927 840

(CR 5813) 01/06

## மரண அறிவித்தல்



### திருமதி கிருஸ்ணபிள்ளை வசந்தாதேவி

மலேசியா சிரம்பானை பிறப்பிடமாகவும் நெல்லியடி, இந்தியா, லண்டன், ஹரோ வை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஸ்ணபிள்ளை வசந்தாதேவி கடந்த (30.10.2021) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சுப்பையா தங்கம்மா தம்பதியரின் அருமை மகளும், அமரர் கிருஸ்ணப்பிள்ளையின் அன்புத் துணைவியாரும், அமரர் Dr.மகேஸ்வரன், அமரர் மனோகரன், திரு.சிறீகரன், அமரர் கருணாகரன், திரு.குணாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் திருச்சதிதேவி, திருமதி யோகேஸ்வரி, திருமதி ராஜேஸ்வரி, அமரர் லலிதா, டில்குஷி, திருமதி சுபாசினி ஆகியோரின் அன்பு மைத்துனியும், அமரர் பிரபாகரன், அமரர் சந்திராகரன், திரு. தேவாகரன், திரு. ரூபாகரன், திருமதி சுபாசினி, திரு. சுதாகரன், திரு.ரமேஸ், திரு.சுரேஸ் (லண்டன் பாபா- Former mayor of Harrow Cabinet member for public health and equalities) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திரு.ஸ்ரீபாலகிருஸ்னன், திரு.திருச்செல்வம் ஆகியோரின் பாசமிகு வளர்ப்பு தாயாரும், திருமதி ஆனந்தீஸ்வரி, திருமதி சாந்தினிதேவி, திருமதி ஜெசி, திரு.புஸ்பநாதன், திருமதி காஞ்சனா, திருமதி கீதா, திருமதி சசிகலா (Depty mayor of Harrow) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சக்திவேல், கார்த்திகாயினி, பிரதீப், வைஸ்ணவி, விபிஷன், பவித்திரன், ஜெரி, அச்சு, சகானா, தீபக், அஸ்வினி, ஆகாஸ், ஷாலினி, ஹரீஷ் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், ஆரணியா, பிரதீபன், சமந்தா, மயூரன், சஃபரினா, சுதன், அர்ச்சுனன் ஆகியோரின் அன்புப் பாட்டியும், அருஸ், அயிரா, சியானா, ரியா, சியாரா, அமீரா, கைலாஷ், வீரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

கிரியை பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சோபியா

Devaharan - 07950278725
Suthaharan - 078 47621853
Suresh - 07967565477
(London Baba)
Rubaharan - 0091907 3306023
Ramesh - 001(347)567-0651

(CR 5812) 1-6

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள்

மலர்வு 03 . 07 . 1928



உதிர்வு 04 . 10 . 2020

### கதிரிப்பிள்ளை செல்வராசா

கடந்த 04.10.2021 அன்று காலஞ்சென்ற எமது குடும்பத் தலைவர் கதிரிப்பிள்ளை செல்வராசா அவர்களது அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (03.11.2021) புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும், பகல் 11.00 மணியளவில் நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறும் அன்பர்கள் யாவருக்கும் அன்புடன் அறியத் தருகின்றோம்.

நெல்லியடி.
076 5325 338

குடும்பத்தினர்.

(CR 5809) 1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 02 . 1935



இறப்பு 01 . 11 . 2021

### திருமதி நவரத்தினம் பூமணி

கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் வடக்கு, தொல்புரம் மற்றும் முருகன் வீதி, உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரும்தி நவரத்தினம் பூமணி அவர்கள் நேற்று (01.11.2021) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை, சின்னத்தங்கம் அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பையா, கனகம்மா, இராசையா, சின்னையா, அன்னம்மா, பாக்கியம், இராசமணி மற்றும்,இராசலட்சுமி, நவரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான துரைச்சாமி, இராசரத்தினம் ஆகியோரின் மைத்துனியும், நாகபூசணி (கௌரி), ரதவதனி (ரதி), சாந்தினி, பாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயபாலா, தேவரமணன், வரதராஜன் ஆகியோரின் மாமியாரும், கவிதா வாகீசன் (ஆசிரியர் யா/குரும்பசிட்டி பொன். பரமானந்தா மகா வித்தியாலயம்), தனுஜ்ஜா (பல்கலைக்கழகம், மொறட்டுவ), கோசலா, யதுஷா ஆகியோரின் பேர்த்தியும், ஜனந்திகா, சாத்விகன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 993 8774

(CS 17912) 1-6

# தொற்று 308, சாவு 17

கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி மேலும் 17 பேர் உயிரிழந்துள்ளனர் என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை,நாட்டில் மேலும் 408 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதன்படி, இலங்கையின் மொத்த கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 5 இலட்சத்து 41 ஆயிரத்து 481ஆக அதிகரித்துள்ளது. (த-இ)


**NOTICE**

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS)**
**WORLD BANK FUNDED ACCELARATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION**

**POST OF SECRETARY (FULL TIME)-ON CONTRACT BASIS - 01 VACANCY**

The University of Jaffna, Sri Lanka will entertain applications for the above mentioned post under OTS - AHEAD Operation from suitably qualified persons up to.12.11.2021

Applicants are requested to visit Jaffna University website www.jfn.ac.lk for further details.

Registrar (CR.35813)(2.6)


# பெரமுனவுக்கு வயது 5

## தாமரைத்தடாகத்தில் இன்று விழா

கொழும்பு, நவ. 2

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 5ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் ஆசியுடன், பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் கொழும்பு தாமரை தடாகத்தில் இன்று நடைபெறும் இந்த நிகழ்வில், கட்சியின் ஸ்தாபகரான நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச உட்பட கட்சி பிரமுகர்கள் பங்கேற்கவுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசியல் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுக்கும் மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மொட்டு கட்சிக்கும், பங்காளிகளுக்குமிடையில் தற்போது மோதல் ஏற்பட்டுள்ளதால், பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்பார்களா என்பது கேள்விக்குறியே. சிலவேளை, கட்சிகளின் சார்பில் பிரதிநிதிகள் பங்கேற்கக்கூடும்.
2016 நவம்பர் 2 ஆம் திகதி உதயமான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி, குறுகிய காலப்பகுதியிலேயே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது. (த-44)


**வவுனியா வடக்கு பிரதேச சபை**
**2022.01.01 முதல் 2022.12.31 வரை மரக்கறி சந்தைகள், மீன் சந்தைகள் மற்றும் இறைச்சிக் கடைகள் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் 2022**

**கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 2021.11.02 தொடக்கம் 2021.11.16 ஆம் திகதி வரை**
**கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி : 2021.11.16 பிற்பகல் 02.00 மணி**
**கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 2021.11.16 பிற்பகல் 02.00 மணி**

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| தொ.இ | குத்தகை விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1. | கனகராயன்குளம் கோழிக்கடை | 2,000.00 | 10,000.00 | 273,350.00 |
| 2. | கனகாரயன்குளம் மீன்சந்தை | 2,000.00 | 10,000.00 | 211,860.00 |
| 3. | கனகாரயன்குளம் மரக்கறிசந்தை | 2,000.00 | 10,000.00 | 729,795.00 |
| 4. | புளியங்குளம் கோழியிறைச்சிக்கடை | 2,000.00 | 10,000.00 | 67,650.00 |
| 5. | புளியங்குளம் மீன்சந்தை | 2,000.00 | 10,000.00 | 33,000.00 |
| 6. | புளியங்குளம் மரக்கறிசந்தை | 2,000.00 | 10,000.00 | 82,500.00 |
| 7. | நெடுங்கேணி கோழிக்கடை இல 01 | 2,000.00 | 10,000.00 | 678,700.00 |
| 8. | நெடுங்கேணி கோழிக்கடை இல 02 | 2,000.00 | 10,000.00 | 600,050.00 |
| 9. | நெடுங்கேணி மீன்சந்தை | 2,000.00 | 10,000.00 | 110,000.00 |
| 10. | நெடுங்கேணி மரக்கறிசந்தை | 2,000.00 | 10,000.00 | 772,530.00 |
| 11. | நயினாமடு மரக்கறிசந்தை | 2,000.00 | 5,000.00 | 19,800.00 |
| 12. | நயினாமடு கோழிக்கடை | 2,000.00 | 5,000.00 | 38,500.00 |
| 13. | சம்பத்நுவர வாராந்த சந்தை | 2,000.00 | 5,000.00 | 18,000.00 |

01. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி, இரண்டாம் பிரதி என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு "தவிசாளர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்படுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்.
02. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராமஅலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராகக்" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
04. தெரிவு செய்யப்படும் கடைகள், சந்தைகளுக்கான சித்தி தரக்கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 2/3 பங்குத்தொகையை 2021.11.22ஆம் திகதி செலுத்தி அன்றைய தினமே ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மிகுதி 1/3 தொகையினை 2022.08.31 இற்கு முன்னர் மாதாந்தம் சம தொகைகளாக ஒவ்வொரு மாதமும் 05 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறுமிடத்து 10% தண்டப்பணம் அறவிடப்படும்.
05. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை எந்தவொரு காரணமும் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
06. கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்பு பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
07. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
08. மரக்கறிச்சந்தை மண்டபம் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர், கொண்டுவரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக்கூடாது.
09. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்
10. கடை, சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு தாங்கள் முழுப் பொறுப்பாளியாவீர்கள்.
11. மரக்கறிசந்தைக்கு உற்பத்தியாளரால் விற்பனைக்கு கொண்டுவரப்படும் உற்பத்திபொருட்களின் நிறையில் கழிவுகள் எதனையும் குத்தகையாளரால் விதிக்கமுடியாது.
12. சந்தைகளை குத்தகைக்கு பெறுபவர் வியாபாரிகள் கோருமிடத்து சந்தைப்பகுதியில் இடம் இருப்பின் நியாயமான வாடகைக்கு வழங்குதல வேண்டும்
13. சந்தைச்சுற்றாடலில் இருந்து 02Km (இரண்டு கிலோமீற்றர்) சுற்றுவட்டாரத்தில் மரக்கறி, மீன், இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

❖ **(விண்ணப்ப படிவங்களை 2021.11.02 தொடக்கம் 2021.11.16 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு்பகல் 9.00 தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரையும் 2021.11.16ஆம் திகதியானது பிற்பகல் 1.00 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.)**

**திரு. சபாரத்தினம் தணிகாசலம்,**
**தவிசாளர்,**
**வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி.**

CR 35814 (3.6)


# திறக்கப்படவுள்ளன பேராறின் வான் கதவுகள்

## மக்களுக்கு எச்சரிக்கை

வவுனியா, நவ. 2

வவுனியா பேராறு நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறக்கப்படவுள்ளமையால், அதன்கீழ்உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களை அவதானமாக இருக்குமாறு மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில், இடர் முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் திலீபன் தெரிவிக்கையில்,

தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக வவுனியா மாவட்டத்தில் தாழ் நிலப் பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளதுடன், குளங்களின் நீர்மட்டமும் அதிகரித்து வருகின்றது. அந்தவகையில் பேராறு நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் சடுதியாக உயர்வடைந்துள்ளது. இதன் காரணமாக பேராறு நீர்த் தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்படவுள்ளன. எனவே, அதன் கீழ் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

குறிப்பாக, பேராறு நீர் தேக்கத்தின் கீழ் உள்ள புதுக்குளம், சாஸ்திரிகூழாங்குளம், ஈச்சங்குளம், மருதமடு, பாலமோட்டை ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களை அவதானமாக இருக்குமாறு அவர் தெரிவித்துள்ளார். (த-18)

### உடைப்பெடுக்கவுள்ள...

இடர் முகாமைத்துவ பிரிவால் மேற்கொள்ளப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் சில நாள்களாக கடும் மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக குளங்களின் நீர்மட்டம் அதிகரித்து வருவதுடன், தாழ் நிலப்பகுதிகளில் வெள்ள நீர் தேங்கி வருகின்றது.

மழை காரணமாக வவுனியா, ஓமந்தை -நொச்சிக்குளத்தின் நீர் வரத்து அதிகரித்த நிலையில் குளத்தில் காணப்பட்ட உமை காரணமாக குளத்தின் கட்டு கீழ் இறங்கி உடைப்பெடுக்கும் நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு மற்றும் இராணுவத்தினர், நகரசபையின் தீயணைப்பு பிரிவு, கமநல அபிவிருத்தி திணைக்களத்தினர் இணைந்து குளக்கட்டில் மண் பைகளை இட்டு குளம் உடைப்பெடுக்காமல் தடுக்கும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த குளம் உடைப்பெடுத்தால் அதன் கீழ் உள்ள 98 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலங்கள் அழிவடைவதுடன், பல குடிமனைகளும் நீரில் மூழ்கும் அபாய நிலை ஏற்படும். உடைபெடுப்பதை தடுக்கும் நடவடிக்கை இரவிரவாக முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-18)

## 60 ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனை

மலர்வு
11.05.1944



உதிர்வு
04.09.2021

மலர்வு
05.06.1952



உதிர்வு
03.09.2021

**ஆருயிர் அண்ணன் தங்கையான**

அமரர் திரு. **குழந்தைவேலு நடராசா (ராசு)**
(வேலவன்ஸ்)

அமரர் திருமதி **அருந்தவதேவி மாணிக்வாசகர் (ராசா)**

**(வீராங்கொடை தெல்லிப்பளை)**

அன்பான உடன் பிறப்புக்களே அவனியில் எம்மை தவிக்க - விட்டு
ஆறாத துயர் தந்து விண்ணுக்கு ஏகீனீரே இவ் அறுபதாம் நாள் தனில்
உமது ஆத்மாக்கள் எமது குல தெய்வமமாம்
வைரவப் பெருமானின் பாதார விந்தங்கள் - அடைந்து
ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வீராங்கொடை
தெல்லிப்பளை கிழக்கு.

ஆறாத பிரிவுத் துயரில்
அன்பான சகோதரர்கள்,
மருமக்கள், பெறாமக்கள்.

(cs 40787 (2.6)


# பெண்களுக்கு 'சிலிண்டர்' மாணவிகளுக்கு 'ஸ்கூட்டி'

## பிரியங்கா காந்தியின் கவர்ச்சிகரமான தேர்தல் வாக்குறுதிகள்

உத்தரப்பிரதேசம், நவ.2

உத்தரப்பிரதேசத்தில் அடுத்த ஆண்டு சட்டசபைத் தேர்தல் நடை பெறவுள்ள நிலையில் காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா தீவிர பரப்புரை செய்து வருகிறார்.

அவர் நாள்தோறும் அதிரடியான தேர்தல் வாக்குறுதிகளை அளித்து பரப்புரையில் அசத்தி வருகிறார்.

அதன்படி பாடசாலை மாணவிகளுக்கு ஸ்கூட்டி மற்றும் ஸ்மார்ட் போன் இலவசமாக வழங்கப் படும். பெண்களுக்கு வருடந்தோறும் 3 காஸ் சிலிண்டர் இலவசமாக வழங்கப்படும்.

காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தால் பஸ்களில் பெண்களுக்கு கட்டணச் சலுகை அளிக்கப்படும் என பிரியங்கா தெரிவித்துள்ளார். (ச-இ)




## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை
## இயக்கச்சி சந்தை வளாக கடைகள் நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் 2022

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 02.11.2021 தொடக்கம் 16.11.2021 பிற்பகல் 2.00 மணி வரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 16.11.2021 பிற்பகல் 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 16.11.2021 பிற்பகல் 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

| இல. | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | VS – 03 | 75,000.00 | 7,500.00 | 2,000.00 |
| 02 | VS – 04 | 75,000.00 | 7,500.00 | 2,000.00 |
| 03 | PS – 04 | 150,000.00 | 15,000.00 | 2,000.00 |
| 04 | PS – 06 | 120,000.00 | 12,000.00 | 2,000.00 |
| 05 | PS – 07 | 120,000.00 | 12,000.00 | 2,000.00 |
| 06 | PS – 08 | 105,000.00 | 10,500.00 | 2,000.00 |
| 07 | PS – 10 | 105,000.00 | 10,500.00 | 2,000.00 |
| 08 | PS – 11 | 96,000.00 | 9,600.00 | 2,000.00 |
| 09 | PS – 12 | 96,000.00 | 9,600.00 | 2,000.00 |
| 10 | PS - 13 | 96,000.00 | 9,600.00 | 2,000.00 |
| 11 | PS - 14 | 96,000.00 | 9,600.00 | 2,000.00 |

நிபந்தனைகள்
01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 16.11.2021 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும் குறித்த மாத வாடகைப்பணத்தினை அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவேண்டும் தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10% தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகை பணத்தினை டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டும்.
06. கேள்வி சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையினை முழுமையாகச் செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகெள்ளவேண்டும்
07. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08. சித்திகரகுத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக 03 மாத கால வாடகைத் தொகையினை முற்பணமாகச் செலுத்தவேண்டும்.
09. VS-03, VS-04 ஆகிய கடைகள் மரக்கறி மற்றும் பழ வியாபாரத்திற்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.
10. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
11. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர்/செயலாளருக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சுப்பிரமணியம் சுரேன்
தவிசாளர்
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை


02.11.2021

(CR 35815) 1-6


### தமிழகத்தில்
# ஒன்றரை ஆண்டுக்குப்பின் பாடசாலைகள் ஆரம்பம்

புதுடில்லி,நவ.2


**தமிழகத்தில் ஒன்றரை ஆண்டுக்குப் பின் 1 முதல் 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**



தமிழகத்தில் கொரோனா பாதிப்பு அதிகரித்த நிலையில், கடந்த ஆண்டு மார்ச் மாதம் பிறப்பிக் கப்பட்ட ஊரடங்கை தொடர்ந்து பாடசாலைகள், கல்லூரிகள் என்பன மூடப்பட்டன.

தற்போது கொரோனா பாதிப்பு குறைவடைந்ததை அடுத்து 17 மாதங்களுக்கு பின் கடந்த செப்ரெம்பர் முதலாம் திகதி தொடக்கம் 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட் டன. தற்போது 19 மாதங்களின் பின் 1 முதல் 8 வரையான வகுப்புக்கள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ச-இ)

# ரஜினி நலம்



சென்னை, நவ.2

நடிகர் ரஜினிகாந்துக்கு தலை சுற்றல், மயக்கம் ஏற்பட்டு கடந்த வியாழக்கிழமை ஆழ்வார்பேட்டையில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் தற்போது அவர் குணமடைந்து, நேற்று வீடு திரும்பியுள்ளார். இது தொடர்பில் அவர் காணொலி ஒன்றை வெளியிட்டு நான் நலமுடன் இருக்கிறேன் எனத் தெரிவித்துள்ளார். (ச)

## வேலை வாய்ப்பு

கொழும்பில் வைத்தியர் வீட்டில் வேலை செய்ய பெண் ஒருவர் தேவை.

(ACO 17632)(3.6)

077 073 9853

## விற்பனைக்கு

பப்பாசி (ரெட்லேடி) கன்று
மஞ்சள் கன்று
077 507 0473, 077 202 9464

(CS 1104) (3.6)

## நிறைவேற்று அலுவலர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் கடமையாற்றுவதற்கு பின்வரும் தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி வெற்றிடம் - 01 நிறைவேற்று அலுவலர்**

நிபந்தனைகள்

- பல்கலைக்கழகப் பட்டதாரியாக அல்லது அரசசேவைப் பதவி நிலைத் தரத்திலிருந்து ஓய்வு பெற்ற உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 65 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
- இந்து சமயத்தவராகவும், சமய ஆசார சீலராகவும் இருத்தல் வேண்டும்.
- கோவிலின் சூழலில் தங்கியிருந்து பணியாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- மும்மொழிப் (தமிழ், ஆங்கிலம், சிங்களம்) புலமையுடையவராக இருத்தல் வேண்டும்.
- சிறந்த தேக ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.

**(ஓய்வு நிலையுடையவர்கள் விண்ணபிக்கும் போது தேக ஆரோக்கியத்தினை உறுதிப் படுத்தி வைத்திய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.)**

**தாங்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை 'செயலாளர்" அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு எனும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலம் 15.11.2021 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.**

**திரு.ந.மோகனரூபன்,
செயலாளர்,
அறங்காவலர் சபை ,
ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.**

(CR 5807) (3.6)

## இலங்கை வங்கி

### பின்வரும் கிளையை இடம் மாற்றுவதற்கு பொருத்தமான கட்டடம் தேவைப்படுகின்றது. இலங்கை வங்கி - பூவரசன்குளம் கிளை

உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:

- ஆகக்குறைந்தது 2000 சதுர அடி இட அளவினைக் கொண்டிருப்பதுடன் கீழ்த் தளமாகவும் இருத்தல் வேண்டும். (பகுதிகளாக பிரிக்கப்படாது இருத்தல் வேண்டும்.)
- கட்டடத்தின் முகப்பானது குறைந்தபட்ச அகலம் 35 அடிக்கு மேற்பட்டதாக பிரதான வீதிக்கு முகப்பாக அமைந்திருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான அளவு இடவசதி காணப்படல் வேண்டும்.
- 60 அம்பியர் மூன்று கட்ட மின்சாரம், நீர் விநியோக வசதி, இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி சேவை மற்றும் ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறாகப் பாவிக்கக் கூடிய மலசலகூட வசதி, அவசர நேரங்களில் வெளியேறக் கூடிய வாசல் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளுடன் காணப்படல் வேண்டும்.
- கட்டடத்தின் தரைப்பகுதிக்கு தரை ஓடு (Tile) பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். (2'x2')
- மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு (ஜெனரேட்டர்) 10'x10' அளவிலான நல்ல காற்றோட்டம் உள்ள அறை கட்டடத்தின் பின்புறம் இருத்தல் வேண்டும். (அவ் அறையானது இரும்பு கம்பி போடப்பட்டு பாதுகாப்பானதாக இருத்தல் வேண்டும்.)
- நீரைச் சேமித்து வைக்க 1000 லீட்டர் கொள்ளளவைக் கொண்ட நீர்த்தாங்கி ஒன்று இருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ளோர் கட்டட வரைபட பிரதிகள் மற்றும் சகல சான்றிதழ்களுடன் 14 நாட்களுக்குள் பின்வரும் விலாசத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கடித உறையில் இடது மேல் மூலையில் "பூவரசன்குள கிளைக்கு - பொருத்தமான கட்டடம்" எனத் தயவுசெய்து குறிப்பிடவும்.

உதவிப் பொது முகாமையாளர் (வடபிராந்தியம்),
இலங்கை வங்கி,
வடபிராந்தியக் காரியாலயம்,
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 3985 / 3126

(CR 5811) 1-6

1975 BOC CALL CENTRE www.boc.lk

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை இறைச்சிக்கடைகள் மற்றும் பழைய முள்ளிப்பற்று உப அலுவலகத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் 2022

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 02.11.2021 தொடக்கம் 16.11.2021 பிற்பகல் 2.00 மணி வரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 16.11.2021 பிற்பகல் 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 16.11.2021 பிற்பகல் 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம்:- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்
இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அட்டவணை

| இல. | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| புலோப்பளை உப அலுவலகம் | | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 1,931,160.00 | 38,000.00 | 2,000.00 |
| 02 | கோழி இறைச்சிக்கடை | 806,850.00 | 16,000.00 | 2,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக்கடை | 68,200.00 | 5,000.00 | 2,000.00 |
| 04 | கருவாட்டுக்கடை | 13,750.00 | 5,000.00 | 2,000.00 |
| முள்ளிப்பற்று உப அலுவலகம் | | | | |
| 05 | கோழி இறைச்சிக்கடை | 68,200.00 | 5,000.00 | 2,000.00 |
| 06 | பழைய முள்ளிப்பற்று உபஅலுவலகம் | 90,000.00 | 5,000.00 | 2,000.00 |

நிபந்தனைகள்

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 16.11.2021 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகை ரூபா. 300,000.00 இற்கு உட்பட்ட தொகையாயின் கேள்வித்தொகையின் ½ பகுதியையும், ரூபா. 300,000.00 இற்கு மேற்பட்ட தொகையாயின் 1/3 பகுதியையும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும் மிகுதி தொகையினை 08 பகுதியாக பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்தமாதம் 10ம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டமாக அறவிடப்படும்.
06. இறைச்சிக்கடகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத வாடகையினை கேள்வித்தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
07. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
09. மாட்டிறைச்சிக்கடைகளை பெறுவோர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கொல்களத்திலேயே மாடு அறுத்தல் வேண்டும்.
10. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர்/செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சுப்பிரமணியம் சுரேன்
தவிசாளர்
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை

02.11.2021

(CR 35816) 1-6

## கண்ணீர் அஞ்சலி



எமது ஊழியர் நலன்புரிச் சங்க அங்கத்தவரான
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி **த.கிறிஸ்ரீனா**
அவர்களின் அன்புத் தந்தையார்

### அமரர் யோவான் டேவிற்

அவர்கள் கடந்த (30.10.2021) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம் ஊர்காவற்றுறை.**

(cs 40890 (2.6)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை **திருமதி ஜக்குலின் ஜெயசீலன்**
அவர்களின் அன்புக் கணவர்

### திரு.அந்தோனிப்பிள்ளை ஜெயசீலன்

அவர்கள் 29.10.2021 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம்
யா/கொழும்புத்துறை சென் ஜோசப்ஸ்
வித்தியாலயம்.**

(CR 5808) 1-6

## இயற்கைப்...

ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் இடம்பெற்று வரும் சி.ஓ.பி. : 26 என்றழைக்கப்படும் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டுக்கு இணையாக "நைதரசனை மீண்டும் கண்டுபிடித்தல், காலநிலை மாற்றம், சுகாதார உயிரியல் பன்முகத்தன்மை மற்றும் நிலையான பொருளாதாரத்துக்கான தீர்வுகள் மற்றும் இணைச்செயற்பாடுகள்" என்ற தலைப்பின் கீழ் இலங்கை ஏற்பாடு செய்திருந்த விசேட கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

இரசாயனப் பசளைப்பயன்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கும் குழுக்களுக்கு மத்தியில், அதிகளவில் பசளையைப் பயன்படுத்தி விளைச்சலை அதிகரித்துக்கொள்ளும் வழிவகைகளைக் கையாளப் பழகியிருக்கும் விவசாயிகளும் இதனை எதிர்க்கின்றனர். இலங்கையின் சிறந்த விவசாய உரிமைகளை அவதானிக்கும்போது, இந்த நிலை மிகவும் வருத்தத்துக்குரியது.

**விவசாயப் புரட்சி அவசியம்**

இயற்கைக்கு எதிராக மனிதர்கள் செயற்படுவதற்குப் பதிலாக, அதனோடு மிகவும் இணைந்து செயற்பட வேண்டும். நிலையான அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட புதிய விவசாயப் புரட்சியொன்று அவசியம்.

நிலையான அபிவிருத்தியே எமது அரசின் கொள்கை கட்டமைப்பாகும். காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சாசனத்துக்கமைய, இலங்கையின் புதுப்பிக்கப்பட்ட தேசிய நிர்ணயங்கள் மற்றும் அபிலாஷைகள் என்பன நன்கு பிரதிபலிக்கின்றன.

**நோய்க்கு உரமே காரணம்**

நவீன, விஞ்ஞானப் பொறிமுறைகள் மற்றும் பண்டைய வழிமுறைகள் ஊடாக, சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத விவசாய உற்பத்திகளை அதிகரிப்பதே, தற்போது எமக்குள்ள சவாலாகக் காணப்படுகின்றது. இலங்கையில் விவசாயிகளிடையே, பல தசாப்தங்களாக சிறுநீரக நோய் பரவுவது பெரும் பிரச்சினையாக உள்ளது. இரசாயனப் பசளையை அதிகளவில் பயன்படுத்துவதே இதற்கு மிக முக்கிய காரணமாகியுள்ளது. இந்தச்சூழ்நிலையிலேயே இரசாயனப் பசளை இறக்குமதியைக் குறைப்பதற்கும் சேதன விவசாயத்தை அதிகளவில் ஊக்குவிப்பதற்கும் எமது அரசு நடவடிக்கை எடுத்தது. இந்தச்செயற்பாடுகள் பெருமளவில் பாராட்டப்பட்டாலும், ஒருசில விமர்சனங்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் முகங்கொடுத்து வருகின்றோம்.

எனவே, இலங்கை போன்ற வளர்ந்து வரும் நாடுகளுக்கான அபிவிருத்தி உதவிகள், தொழில்நுட்பப் பரிமாற்றல்கள், திறன் அபிவிருத்தி, முதலீடுகள் மற்றும் நிதி உதவிகளையும் இயலுமான பங்களிப்புகளையும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் வழங்கும் என்று எதிர்பார்க்கின்றேன். - என்றார்.

இதேவேளை,

"100 சதவீதமளவில் பசுமை விவசாயத்துக்கு மாறுவதற்கான தீர்மானத்தை எடுத்துள்ள உலகின் முதல் நாடாக இலங்கை உள்ளது" என்று சுற்றாடற்றுறை அமைச்சர் மஹிந்த அமரவீர, தெரிவித்தார். வரலாற்றுக் காலம் முதல் தற்போதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள நைதரசன் தொடர்பான கண்டுபிடிப்புகளுக்காக விஞ்ஞானிகளுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்த அமைச்சர், நைதரசன் கண்டுபிடிக்கப்பட்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் இலங்கையும் அந்தச் சவாலை வெற்றிகொண்டு வருவதாகத் தெரிவித்தார். (த)

## கோத்தாபயவுக்கு...

உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி கோத்தாபய தலைமையில் இலங்கையின் உயர்மட்ட அரச குழுவினர் ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகருக்கு சென்றுள்ளனர். ஸ்கொட்லாந்தின் மத்திய பகுதியில் ராஜபக்ச குழுவினர் தங்கியுள்ளனர் எனக் கூறப்படும் ஹொட்டலுக்கு வெளியிலேயே, அவர்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகத் தமிழர்கள் ஒன்று கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து அந்தப்பகுதியில் பொலிஸ் பிரசன்னம் காணப்படுகிறது. இலங்கையின் இறுதிப் போரில் நிகழ்ந்த இன அழிப்புகளுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டுவரும் கோத்தாபயவின் வருகைக்கு பல்வேறு வழிகளில் எதிர்ப்புத் தெரிவிக்கின்ற முயற்சிகளில் ஸ்கொட்லாந்தில் வசிக்கும் ஈழத் தமிழர்கள் சில நாள்களாக ஈடுபட்டுவருகின்றனர். இலங்கை ஜனாதிபதியை ஓர் 'இன அழிப்புக் குற்றவாளி' எனக் குறிப்பிடும் பிரசுரங்கள் மற்றும் பத்திரிகை விளம்பரங்கள் பல அங்கு வெளியாகியுள்ளன. - என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## விவசாயி...

பட்ட ஆண்டான்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

சம்பவத்தில், பூதன்வயல் முள்ளியவளையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான வேலாயுதம் ரவிச்சந்திரன் (வயது - 36) என்ற விவசாயியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலத்தை மீட்ட முல்லைத்தீவு பொலிஸார் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைத்தனர். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-19)

## ஆரம்பப் பிரிவு...

பிரிவினர் தெரிவித்தனர். தனது உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டதையடுத்து குறித்த ஆசிரியர் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே அவருக்கு தொற்றுள்ளமை நேற்று உறுதிசெய்யப்பட்டது.

அவரை சுய தனிமைப்படுத்துவதற்கும், அவருடன் தொடர்புடையவர்களை இனங்காண்பதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தரம் 5 வரையான பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த ஆசிரியர் பாடசாலைக்கு சென்று தரம் 1 மாணவர்களுக்கு கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-18)

## கடற்படைக்காக...

வுள்ளது. இந்தநிலையில், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அங்கு போராட்டம் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கீரிமலை ஜே/226 கிராமசேவையாளர் பிரிவில் நாளை காலை 8.30 மணியளவில் தமிழ் மக்களுக்கு உரித்தான 2 ஏக்கர் காணி கடற்படையினரின் தேவைக்காக நிலஅளவை திணைக்களத்தால் அளவீடு செய்யப்பட உள்ளது. காணி உரிமையாளர்களின் ஒப்புதல் இல்லாமலே அளவீட்டுப் பணிகள் இடம்பெறவுள்ள நிலையில், காணி அளவீட்டை தடுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து காணி உரிமையாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-இ)

## 48 மணித்தியாலங்களுக்கு...

டுள்ளது.

எனினும், "மின்சார விநியோகத்தை நிறுத்துவதன் மூலம் வேண்டுமென்றே பொதுமக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்க விரும்பவில்லை. ஆனால், ஏதேனும் காரணங்களால் மின்சாரம் துண்டிக்கப்பட்டால் அதனை சரிசெய்ய, போராட்டக் காலப்பகுதியில் கிட்டத்தட்ட 48 மணிநேரங்களுக்கு மின்சார சபை ஊழியர்கள் எவரும் வர மாட்டார்கள்" என இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த கூட்டு தொழிற்சங்கத்தின் இணைப்பாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாங்கள் நாளை புதன்கிழமை பெரும் போராட்டத்தை நடத்தவுள்ளோம். இந்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கை மின்சார சபை மற்றும் துறைமுக அதிகார சபையின் அனைத்து ஊழியர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். இதற்காக அவர்கள் நாடு முழுவதும் இருந்து வருவார்கள்.

இந்தநிலையில், மின் விநியோகத்தில் தடங்கல்கள் ஏற்பட்டால் அதனைச் சரி செய்ய யாரும் இருக்க மாட்டர்கள்" என்று அவர் கூறினார்.

இவ்வாறான போராட்டத்தால் கெரவலப்பிட்டி யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் அமெரிக்க நிறுவனத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை அரசாங்கம் மறுபரிசீலனை செய்யும் என நம்புகிறீர்களா? எனக் கேட்டபோது, "அனைவரும் ஒன்றிணைந்து எதிர்ப்பை வெளியிடும்போது அரசாங்கம் நிச்சயமாக அதற்குச் செவிசாய்த்தே ஆக வேண்டும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

## 2 1/2 மாதங்களுக்கு...

டைய குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கடந்த ஓகஸ்ட் 15ஆம் திகதி குறித்த சடலம் மீட்கப்பட்டிருந்தது.

சம்பவத்தை அடுத்து அந்தப்பகுதியில் கிளிநொச்சி குற்ற விசாரணை பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் கருணாரட்ணம் ஜெசிந்தன் உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் விசாரணை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த கிணற்றை அண்மித்த பகுதியில் காணப்பட்ட சான்றுகள் மற்றும் சாட்சியங்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில் சடலமாக மீட்கப்பட்டவர் கொலை செய்யப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டிருந்தது என்று பொலிஸார் கூறினர்.

இந்தநிலையிலேயே, குறித்த குற்றச்செயல் தொடர்பில் விசாரணைக்காக நியமிக்கப்பட்ட கிளிநொச்சி குற்ற விசாரணைப் பிரிவின் உப் பொலிஸ் பரிசோதகர் கருணாரட்ணம் ஜெசிந்தன் தலைமையிலான குழுவினர், குறித்த கொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கிளிநொச்சியில் குறித்த நபரைக் கைதுசெய்தனர்.

அவர் இரத்தினபுரம் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞர் எனவும், உயிரிழந்தவருக்கும், சந்தேகநபருக்கும் இடையில் ஏற்பட்ட திடீர் முரண்பாடு காரணமாக கோபம் தலைக்கேறியநிலையில், குறித்த கொலை இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (த-6)

## புதிய திரிபான...

குள் நுழையும் அபாயம் உள்ளது என்று, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் நேற்று எச்சரித்தது.

வெளிநாடுகளில் முன்னர் கண்டறியப்பட்ட அனைத்து கொரோனாத் திரிபுகளும் குறுகிய காலத்துக்குள் இலங்கையில் கண்டறியப்பட்டன என்று குறிப்பிட்ட சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண, அவற்றைப் போலவே, இந்த மாறுபாட்டையும் நாட்டில் எந்த நேரத்திலும் கண்டறியப்படலாம் என்று தெரிவித்தார். குறித்த புதிய திரிபு வைரஸ் நாட்டுக்குள் நுழைந்து பரவத் தொடங்கினால், நிச்சயமாக பேரழிவு ஏற்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

எனவே, சுகாதார நடைமுறைகளை பொதுமக்கள் இறுக்கமாகக் கடைப்பிடிக்கவேண்டும். புதிய திரிபுகளை தள்ளி வைத்திருப்பதே ஒரே வழி- என்றார்.

இதேவேளை, புதிய கொரோனா வைரஸ் திரிபு தொடர்பில் இலங்கை மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜெயசுமன தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-இ)

## 702 இலங்கையர்கள்...

டுள்ளன என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவு கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று அறிவித்துள்ளது.

இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள பலம் வாய்ந்த ஐ.எஸ் உறுப்பினர் ஒருவருடன் தொடர்பு வைத்திருந்தனர் என்ற அடிப்படையிலேயே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அவர்கள் தெரிவித்தனர்.

ஐஎஸ் அமைப்பைச் சேர்ந்த முகமது சம்சுதீன் என்பவர், அண்மையில் இந்திய அரச புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

702 இலங்கையர்களுடன் அவருக்கு தொடர்பு இருப்பதாக அவரது வட்ஸ்அப் கணக்கில் தகவல் கண்டறியப்பட்டுள்ளதாக பயங்கரவாத தடுப்புப் பிரிவு, நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

உயிர்த்தஞாயிறு பயங்கரவாத தாக்குதலின் முக்கிய குண்டுதாரியான சஹ்ரான் ஹாஷிமின் ஒளிப்படங்கள் மற்றும் உரைகள் கணக்கில் காணப்பட்டன என்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. இந்த 702 பேரில் ஒருவரை ஏற்கனவே கைதுசெய்து தடுத்து வைத்துள்ளோம் என்றும் ஐ.எஸ். அமைப்பின் தொடர்புகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (த-இ)

## நரேந்திரமோடியை..

யும் நட்பு ரீதியாக சந்தித்துக் கலந்துரையாடினர். குறித்த கருத்தமர்வில் கலந்துகொண்டுள்ள அரச தலைவர்களை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நட்பு ரீதியாக சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

இந்தநிலையிலேயே, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார் என்று இந்தியப் பிரதமரின் டுவிற்றர் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. (த-இ)

# ரி-20 உலகக்கிண்ணத்திலிருந்து வெளியேறியது இலங்கை அணி

துபாய், நவ. 2

**ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான வாழ்வா? சாவா? ஆட்டத்தில் தோல்வியடைந்து தொடரில் இருந்து வெளியேறியது இலங்கை அணி.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி எதிர்பார்த்ததைப்போல முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இரண்டாவது பந்துப்பரிமாற்றம் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் வனிந்துவிடம் ஒப்படைக்கப்பட அவர் றோயை வெளியேற்றினார். அதன்பின்னர் இங்கிலாந்தின் ஓட்டச் சராசரி படுமந்த நிலையில் நகர ஆரம்பித்தது. பட்லர் ஒருமுனையில் நிலைத்து



நின்றமைதான் ஒரேயொரு ஆறுதலே தவிர முதல் 10 பந்துப் பரிமாற்றங்களில் சொல்லிக் கொள்ளும் படியான வேறெந்த அடைவையும் இங்கிலாந்து எட்டவில்லை. மலன் 6 ஓட்டங்களுடனும் பேர்ஸ்ரௌவ் ஓட்டமெதையும் பெறாத நிலையிலும் வெளியேற்றப்பட 10 பந்துப்பரிமாற்றங்களில் 50க்கும் குறைவான ஓட்டங்களையும் 3 இலக்குகளையும் இழந்து பெற்றிருந்தது இங்கிலாந்து. அதன்பின்னர் மோர்கன் படிப்படியாக அதிரடிக்குத் திரும்ப இலங்கையை அடக்கியாளக்கூடிய ஓட்டங்களை இங்கிலாந்து குவிக்க ஆரம்பித்தது. அரைச்சதம் கடந்த பட்லர் 67 பந்துகளில் சதத்தை நிறைவுசெய்ய 4 இலக்குகளை இழந்து 163 ஓட்டங்களைப்பெற்றது இங்கிலாந்து. பந்துவீச்சில் வனிந்து 3 இலக்குகளைக் கைப்பற்றினார். பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணிக்கு ஆரம்ப வீரர் பதும் நிஷங்க ரண்அவுட் ஆகி ஏமாற்றினார். இலங்கையின் முன்வரிசை வீரர்கள் எவரும் இலக்கை எட்டக்கூடிய அதிரடியை வழங்கவில்லை. குறிப்பாக குசல் பெரேராவின் தடுமாற்றம் நேற்றும் தொடர்ந்தது. அவர் 9 பந்துகளில் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தோல்வியை நோக்கி இலங்கை நடைபோட்டுக் கொண்டிருக்கையில் அணித்தலைவர் சானக, வனிந்து ஹசரன்க இருவரும் இணைந்து ஆட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்த எத்தனித்தனர். இங்கிலாந்தின் பந்துவீச்சாளர் ஒருவர் காயத்தால் விலகியமை அந்த அணிக்குப் பின்னடைவை ஏற்படுத்தியது. இதனால் இங்கிலாந்திடம் இருந்து இறுதிக் கட்டத்தில் ஆட்டத்தைப் பறித்தெடுக்க இலங்கைக்கு வாய்ப்பு இருந்தது என்றே கருதப்பட்டது. எனினும் வனிந்து 34 ஓட்டங்களுடனும் சானக 26 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து வீழ்த்தப்பட 137 ஓட்டங்களில் சுருண்டது இலங்கை அணி. 26 ஓட்டங்களால் இங்கிலாந்து வென்றது. (ம)

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978 இல் பிறந்த கார்த்திகை 2 ஆம் பாதம் காரைநகரில் வசிக்கும் மணமகளுக்கு மணமகன் தேவை.

Whatsapp Viber +143 777 81050
077 403 0760

(cs 40635) (2.6)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மானிப்பாய் சமுர்த்தி வங்கி வீதியில் 3 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நிலப்பரப்பு, 1 1/2 பரப்பில் ஒரு துண்டும் 1 3/4 பரப்பில் ஒரு துண்டும் பரப்பாக பிரிக்கப்பட்டநிலையில் 14 அடி பாதையுடன் மருதடி விநாயகர் கோவிலில் இருந்து 700M தூரம்.

**பார்வையிடும் நேரம் :**காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

- தரகர் தேவையில்லை.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 814 7389**
**077 614 7333**

(CS 40864) 1/6

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

தீபாவளி விசேட தள்ளுபடி

அரச சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும்
சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாகவும்
இந்தியன் செலக்ஷனின் தீபாவளி மலிவுவிற்பனை நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியோடு வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்து கொள்கின்றோம்.





பட்டுச்சாறிகள்
கொட்டுன் சாறிகள்,
சல்வார்கள்,
சல்வார் துணிகள்,
டொப் வகைகள்
சிறுவர்,சிறுமியருக்கான ஆடைத் தெரிவுகள்
மற்றும் ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைத் தெரிவுகள்

இம்முறை தீபாவளியை
இந்தியன் செலக்ஷனுடன் கொண்டாட
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(CR 5810) 1-6

இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம்: 22.10.2021 - 07.11.2021 வரை
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

## மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 04 . 1935



மறைவு
29 . 10 . 2021

### ஞானசிரோன்மணி அழகரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானசிரோன்மணி அழகரத்தினம் கடந்த (29.10.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - இராசம்மா தம்பதியினரின் மூத்த மகளும், காலஞ்சென்ற அழகரத்தினம் (ஓய்வுபெற்ற பிரதம தபால் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், மனோரஞ்சிதம், காலஞ்சென்ற மதனசுரேந்திரன் மற்றும் சரோஜினிதேவி, காலஞ்சென்ற இராசகுமாரன் மற்றும் உதயகுமாரன் ஆகியோரின் சகோதரியும், அகிலன் (கனடா), அசோகன் (லண்டன்), அனுசியா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நளாயினி, விஷ்னுவர்த்தனி (வினோ), ரூபநாதன் ஆகியோரின் மாமியும், வர்ஷன், அபிஷா, ரூபிஷா, அபிஷா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2021) புதன்கிழமை சுதுமலை தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்,

(cs 40884) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்
077 622 1304



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.